
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 3	இதழ்: 9	பிப்ரவரி - 2022	விலை - ரூ.10/-
VOL:3	ISSUE: 9	FEBRUARY - 2022	Rs. 10/-



நானிலம் போற்றும் நாகூர் ஆண்டவர்!

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-3 மலர்-9 பிப்ரவரி - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

நான் உன்னை தேடி வந்து விட்டேன் எதற்காகவும் கவலை படாதே!

பல தடவை நான் உன்னிடம் கூறியிருக்கிறேன் நீ படும் துன்பத்தை பார்த்து நான் கலங்கி நிற்கின்றேன். எனது துவாரகாவில் நீ செய்த பாவங்களை போக்க உனக்காக நான் விளக்கேற்றி கொண்டு இருக்கிறேன்.

உனது கர்ம பலன்களை விலக்கி உனது உள்ளத்தை தூய்மையாக்கி உன்னை அனைத்திலும் வெற்றி தரப் போகிறேன். நான் தினமும் உன்னை தேடி நீ போகும் இடமெல்லாம் வந்து கொண்டு தான் இருக்கிறேன்.

ஏற்ற தாழ்வுகள் வந்து போகும் எதுவும் நிரந்தரமில்லை. கலங்காதே! நீ வாழ்க்கையில் உயரபோகிறாய். எனது வாக்கு பொய்யானது இல்லை. உனது பிள்ளைகள் உனக்கு பெருமை சேர்ப்பர். நான் அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை வழங்குவேன்.

எனது அனுமதி இல்லாமல் எதுவும் நடக்காது. எனது துவாரகா மண்ணில் கால் வைக்க கூட முடியாது உனது வருகைக்காக நான் எனது விழிகளை திறந்து காத்திருக்கிறேன். இனி நீ ஜெயிக்க போகிறாய் அது தெரியாமல் கவலை பட்டு கொண்டு இருக்கிறாய் நம்பிக்கையோடு இரு. நான் இருக்கின்றேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து மூன்றாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 9.1.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

உலகம் முழுவதும் பரவிவரும் பெரும் தொற்றில் இருந்து மக்கள் அனைவரும் விடுபட மீண்டும் அரசால் அறிவிக்கப்பட்டிருக்கும் முழு அடைப்பின் காரணமாக இம்மாத இதழ் வெளியீடு பக்தர்கள் இன்றி மிக எளிமையாக ஆன்லைனில் நடந்தேறியது.

நோய் தொற்று என்பது காலந்தோறும் வந்து கொண்டே இருப்பதுதான். மக்கள் அனைவரும் அதைக்கண்டு பயப்படாமல், உடற்பயிற்சி, யோகா, தியானம் என்று தங்களது ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தி, உணவு, பழக்கவழக்கங்களில் ஒழுக்கத்தை கடைபிடித்தால் நோய் தொற்றை பற்றிய கவலைப் பட வேண்டிய அவசியமில்லை.

இக்கடுமையான காலகட்டத்தில் பல இதழ்கள் வெளிவராமல் நின்றுவிட்டன. பல இதழ்கள் வலைத்தள இதழ்களாக மாறிவிட்டன. இருப்பினும் நமது பகவான்



சாயி மகராஜ் குருவை தேடி | பிப்ர

சாயிநா தரின் எல்லை யில்லா கருணையினால் நமது இதழ் வெளிவந்து கொண்டிருக்கின்றது. பாபா வின் கருணை அனைவருக் கும் சென்று சேர வேண்டு மானால் இந்த இதழைப் படிக்கும் ஒவ்வொரு வரும், ஒரு சந்தாதார ரையேனும், குறைந்தது ஒரு வருடத் திற்காவது சேர்த்து விட்டு சாயி சேவையில் இணையும் படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.



ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு திருவள்ளூர் ஸ்ரீராம் சாய்பாபா ஆலயத் தின் அறங்காவலர் திருமதி பத்மா சாயராம் அவர்களின் அன்பிற்கினங்க, அவர்களின் அழைப்பை ஏற்று திரு வள்ளூர் சென்று அம்மா அவர்களை சந்தித்து வந்தது மனநிறைவை நல்கியது.

சாய் தியானாவில் பாபா ஆலயம் கட்ட வேண்டும் என்று பிரார்த்தனை வைத்த அந்தியூர் திரு. விஸ்வநாதன் அவர்கள் ஆறு மாதங்களுக்குள் அந் தியூரில் பகவான் பாபாவிற்கு ஆலயம் எழுப்பி சென்ற 19.01.2022 புதன் கிழமை விக்கிரக பிரதிட்டை விழாவை மிகச் சிறப்பாக நடத்தி முடித்தார். அதற்காக நமது குருஜி ஸ்ரீராம் அவர்க ளுக்கும், சாய் தியானா உறுப்பி னர்களுக்கும், மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

நெய்வேலியைச் சேர்ந்த திரு. கோலப்பன் அவர்கள் நம் ஆசிரியர் அவர்களை நேரில் சந்தித்து அன்ன தானத்திற்கு நன் கொடை அளித்து பகவான் சாயிநாதரின் மகத்து வங்களை பேசி மகிழ்ந்தனர்.

இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் அளிக்கப்பட்டது. பகவான் சாயிநா தரின் அருளால் மிக விரைவில் உல கெங்கும் பரவியிருக்கும் பெருந் தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுட னும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!



அறிவும் ஞானமும்

அறிவு என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? இரண்டுக்கும் வித்தியாசம் என்ன?

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் மூன்று மாணவர்கள் பாடம் படித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அறிவு, ஞானம் பற்றிய சந்தேகம் இருந்தது.

மூன்று மாணவர்களும் சேர்ந்து போய் அறிவு என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன என்று குரு இராமகிருஷ்ண பரமஸம்சரிடம் கேட்டனர்.

அவர் அறிவு, ஞானம் பற்றி பல நாள்கள் பாடம் எடுத்தும் அவர்கள் மூவருக்கும் அது முழுவதுமாக விளங்கவில்லை. இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை அவர்களால் உணர முடியவில்லை.

ஒரு நாள், பகவான் இராமகிருஷ்ண பரமஸம்சர் மூன்று மாணவர்களையும் அழைத்து, "இன்று உங்களுக்கு ஞானம் என்றால் என்ன? என்பதை ஒரு செயல் மூலம் விளக்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு மூவரையும் ஒரு அறையில் உட்கார வைத்தார்.

அவர் மற்றொரு அறைக்குச் சென்று சிறிது நேரத்தில் வெளியே வந்தார். அறையின் கதவுகளை மூடிவிட்டு அம்மூவரின் அருகில் வந்து அமர்ந்தார்.

முதல் மாணவனைப் பார்த்து, "நான்போய் வந்த அறையினுள் மூன்று தம்ளர் பால் உள்ளது. அதில் நீ ஒரு தம்ளர் பாலை பருகி விட்டு வா" என்று முதல் மாணவனை அறைக்குள் அனுப்பினார்.

அந்த மாணவனும் உள்ளே சென்றான். உள்ளே, தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய மூன்று தம்ளர்களில் காய்ச்சிய பால் இருந்தது. அவனோ உடனே தங்கத் தம்ளரில் இருந்த பாலை எடுத்து மிகுந்த சந்தோஷத்தோடு பருகிவிட்டு வெளியே வந்தான்.

அடுத்து இரண்டாவது மாணவன் உள்ளே சென்றான். தங்கத் தம்ளரில் பால் இல்லாததைப் பார்த்த அவன் அதிலிருந்த பால் தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஆதங்கமுற்றான். ஆயினும் அதற்கடுத்த மதிப்பினைக் கொண்ட வெள்ளி தம்ளரில் இருந்த பாலை எடுத்துக் குடித்துவிட்டு ஓரளவு நிறைவோடு வெளியே வந்தான்.

மூன்றாவது மாணவன் உள்ளே சென்றதும் காலியாகக் கிடந்த தங்க, வெள்ளி தம்ளர்களைப் பார்த்ததும் கோபம் தலைக்கேறியது. எனக்கு வெண்கல தம்ளர் பாலா? யாருக்கு வேண்டும் இது? நான் என்ன அவ்வளவு இளப்பமானவனா? அவர்களுக்கு எந்தவிதத்தில் நான் தாழ்ந்தவனாகி விட்டேன்?' என்று அவன் மனதில் எண்ணங்கள் ஓடின.

இருப்பினும் குரு பாலைக் குடித்து வா என்று ஆணையிட்டதை நினைவில் கொண்டு, வருத்தத்தோடு வெண்கல டம்ளரில் இருந்த பாலை குடித்துவிட்டு வெளியே வந்தான். அவன் முகத்தில்

சுரத்தே இல்லை!

பகவான் இராமகிருஷ்ண பரமஸம் சர் மூவரையும் பார்த்து, "பாலைக் குடித் தீர்களா" எனக் கேட்டார்.

முதல் மாணவன் மகிழ்ச்சிப் பூரிப்புடன், "தங்கத் தம்ளரில் இருந்த பாலைக் குடித்தேன் குந் நாதா! நான் மிகவும் கொடுத்து வைத்தவன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

இரண்டாவது மாணவனோ, "எனக்கு தங்கத் தம்ளரில் பால் கிடைக்க வில்லை என்கிற வருத்தம் இருக்கின்றது இருந்தாலும் வெள்ளி தம்ளரிலாவது கிடைத்ததே என்கிற மகிழ்ச்சி ஓரளவு இருக்கிறது, குருஜி" என்றான்.

மூன்றாவது மாணவன் பதில் சொல்ல ஆரம்பிக்கும் முன்பே அவனுக்கு அழுகை வந்துவிட்டது. அதனூடேயே அவன், மூன்று பேர்களில் மிகவும் துரதிர்ஷ்டக்காரன் நான் தான் குருஜி. எனக்கு வெண்கலத் தம்ளரில்தான் பால் கிடைத்தது" என்றான்.

மூவருடைய கருத்தையும் அமை தியாக கேட்ட பின் பகவான் இராமகிருஷ்ண பரமஸம்சர் பேச ஆரம்பித்தார்.

மாணவர்களே! தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய மூன்று தம்ளர் களிலும் ஏலக்காய், குங்குமப்பூ சேர்த்து சுண்டக் காய்ச்சிய சுவையான பசும்ப ால்தான் ஒரே அளவில் இருந்தது. அதில் எந்த வேறுபாடும் இல்லை.



பாலை பருகப் போகிற மூவருக்குமே அதிலிருந்து ஒரே மாதிரியான சுவையும், சத்துவ குணமும்தான் கிடைக்கப் போகிறது. அதிலும் வேறுபாடில்லை. ஆனால் நீங்கள் மூவருமே நினைத்தது வேறு.

பால் ஊற்றி வைத்திருக்கும் தம் ளர்களின் மதிப்பைப் பற்றியே உங்கள் மனம் யோசித்ததே தவிர பாலின் குணம், சுவை, ருசி ஆகிய அனைத்தும் ஒரே மாதிரிதான் இருக்கும் என்பதை உங்களில் ஒருவர்கூட யோசிக்கவே இல்லை.

ஆகவே நீங்கள் மூவரும் பண் டத்தை விட்டு விட்டு பாத்திரத் தையே பார்த்துள்ளீர்கள்! ஆகவே பாத்திரத்தைப் பார்த்து சந்தோசப் படுவது "அறிவு" எனப்படும்.

பாத்திரத்தில் உள்ள பண்டத்தைப்

பார்த்து சந்தோசப்பட்டால் அது "ஞானம்" எனப்படும்

ஞானிகள் எப்போதும் பண்டத்தைப் பற்றியும் அதன் பயனைப் பற்றியுமே பார்ப்பார்கள். பண்டங்கள் இருக்கும் பாத்திரங்களுக்கு மதிப்பு தர மாட்டார்கள். மண்சட்டியில் ஊற்றிக் கொடுத்தால் கூட ஆனந்தமாக பருகிச் செல்வார்கள்"

நீங்கள் அறிவு கொண்டு பார்க்காமல் ஞானம் கொண்டு பார்த்திருந்தால் மூவருமே ஒரே மாதிரியான மனோநிலையை எட்டியிருப்பீர்கள்! இதுவே அறிஞருக்கும், ஞானியருக்கும் உள்ள வேறுபாடு என்றார்.

பகவான் ராமகிருஷ்ணர் சொல்லி முடித்ததும் மூன்று பேர்களுக்கும் அறிவிற்கும், ஞானத்திற்கும் உள்ள வேறுபாடு தெளிவாக விளங்கியது.

உங்களுக்கும் கண்டிப்பாக விளங்கியிருக்கும்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

கடவுளை காண வேண்டுமா?

நீங்கள் ஆண்டவனின் சங்கத்தில் சேர விரும்புகின்றீர்களா? அதற்குறிய தகுதிகளை பெற்றுக் கொள்ளுங்கள். பணக்காரர்கள் சங்கத்தில் பணக்காரர்களே சேர முடியும். ஆன்மீக சங்கத்தில் ஆன்மீக வாதிகளே சேர முடியும்.

உங்களுக்கு ஆண்டவன் வேண்டும் என்றால் விரைவில் ஆண்டவனாக மாறுங்கள். நீங்கள் ஆண்டவனாக மாறும் வரை, ஆண்டவன் எவ்வாறு இருப்பான் என்பதை அறிய முடியாது.

ஆண்டவன்
நோய்வாய்ப்படுவதையும்,
அழுக்கடைவதையும், தவறானதை உண்பதையும் பார்த்திருக்கின்றீரா? இல்லை அல்லவா, ஆகையால் நீங்களும் ஆண்டவன் உண்பதையே உண்ண வேண்டும்.

ஆண்டவனின் பீடம் சுத்தமாக இருக்கின்றது. அதில் சிறு தூசி கூட இல்லை. ஆனால் உங்கள் அறையைப் பாருங்கள். குப்பைக் கூடமாக அல்லவா



காட்சியளிக்கின்றது. நீங்கள் ஆண்டவன் வேண்டும் என்றால் உங்கள் வாழ்வு ஆண்டவனின் தூய்மையை பிரதிபலிக்க வேண்டும் அல்லவா? உங்கள் மனம், உடல், இடம் ஆண்டவனைப் போல் தூய்மையாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் ஆண்டவனைக் காண முடியும்.

MAS மஞ்சு அசோசியேட்ஸ்

G/A- 232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 044 24793822 / 23, 9382163822.
E-mail : kamaraj2306@gmail.com

* எங்களின் சேவைகள்

வங்கி கடன்கள்

- வீட்டுக்கடன்
- அடமானக்கடன்
- வியாபாரக்கடன்



LIC
STAR Health Insurance

இன்சூரன்ஸ்

- LIC & STAR

வருமான வரி தாக்கல்

- டேக்ஸ் ஆடிட்
- NON டேக்ஸ் ஆடிட்



சிறந்த முறையில் செய்து தருகின்றோம்.

மக்கள் சேவையில் 18 வது ஆண்டு..

வாடிக்கையாளர்களுக்கு நன்றி!

எங்கள் நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களை அறிமுகப்படுத்தி வாழ்நாள் முழுவதும் வருமானம் பெறலாம். விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

சரண்யா தன்னுடைய பெட்டியில் இருந்து ஓடி வந்து குருஜியிடம், அண்ணா ஒரு சந்தோசமான செய்தி திருவண்ணாமலை மகாலட்சுமிக்கு குழந்தை பிறந்திருக்கின்றது.அதுவும் நீங்கள் கூறியதுபோல் இரட்டைக் குழந்தை என்றாள் ஆனந்தமாக.

நான் கூறியதுபோல் இல்லை. பாபா கூறியதுபோல் என்று திருத்திய குருஜி அனைவரிடமும் பாபாவின் லீலைகளை பகிர்ந்து கொண்டார்.

சீரடிக்கு பயணப்பட்ட அனைவரும் மகாலட்சுமி சீனிவாசன் தம்பதியினருக்கு இரட்டைக் குழந்தைகளை அருளிய பகவான் பாபாவிற்கு நன்றி கூறி பிரார்த்தித்தோம். சகோதரி சரண்யாவிற்கோ இரட்டடிப்பு சந்தோசம். தன்னுடைய வேண்டுதல் நிறைவேறி தனக்கும் குழந்தைவரம் கிட்டி அந்த குழந்தையுடன் சீரடி நோக்கி பயணிக்கையில் இந்த சந்தோசமான செய்தியும் கிட்டியதால் பாபாவிற்கு மனமார நன்றி கூறிக்கொண்டே வந்தார்கள்.

சரண்யா ஞானமூர்த்தி அவர்களைப்பற்றி இங்கே ஒன்றை நான் கட்டாயம் குறிப்பிட வேண்டும். நமது குரு என்று அத்வைத நிலையை அடைந்தாரோ அன்றிலிருந்து பூஜை, புனஸ்காரங்களில் இருந்து விலகிக்கொண்டார். ஆயினும் அடுத்தவர் விருப்பத்தை தடை செய்ய மாட்டார். இன்றும் அப்படித்தான். ஆயினும் அவர் ஏற்படுத்திய சாய் தியானாலயாவில்



அனைத்து நிலையில் இருக்கும் பக்தர்களும் வருவார்களே! அனைவரது விருப்பங்களையும் நிறைவேற்றுவது அவரின் கடமை அல்லவா?

சாய் தியானாலயாவில் யோகா, தியானம் மட்டுமே நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான் சகோதரி சரண்யா அவர்கள் ஒரு நாள் குருஜியிடம், அண்ணா, நீங்கள் அனுமதித்தால் வியாழன் தோறும் மாலை பாபாவிற்கு ஆரத்தி எடுத்து பூஜை செய்யலாம் என்று இருக்கின்றோம் என்று கேட்க, குருவும் உடனே ஒத்துக் கொண்டு, தாராளமாக செய்யுங்கள். ஆனால் என்னை உள்ளே இழுக்காதீர்கள் என்று கூறிவிட்டார்.

எப்படி உடனே ஒத்துக் கொண்டீர்கள் என்று கேட்டதற்கு, பாபா ஒத்துக் கொண்டதால்தான் என்னிடம் கேட்டீர்கள். நான் ஒத்துக்கொண்டால் என்ன? ஒத்துக்

கொள்ளாவிட்டால் என்ன? பாபா நினைப்பது நடந்தே தீரும் என்றார். அதன்படி அன்று ஆரம்பித்த ஆரத்தி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இதில் என்ன ஆச்சர்யம் என்றால் ஆரத்தியை எங்கள் குருநாதரே செய்வதுதான். அது ஒரு சுவாரஸ்யமான கதை அதை அடுத்த மாதம் கூறுகின்றேன். ஆகவே "சாய் தியானாலயாவில்" ஆரத்தி சேவையை ஆரம்பித்தது சரண்யா ஞானமூர்த்தி அவர்களே என்று கூறுவதில் பெருமைகொள்கிறோம்.

பிற்பாடு சரண்யா ஞானமூர்த்தி தம்பதியினருக்கு பாபாவின் அருளால் மற்றொரு பெண் குழந்தையும் பிறந்தது. பகவான் சாயிநாதரின் மீது அளவற்ற நம்பிக்கையும், தனது குருவான ஸ்ரீராம் சாய்ராம் மீது அளவற்ற குருபக்தியும் கொண்டிருக்கும் சகோதரி சரண்யா ஞானமூர்த்தி அவர்களும், அவர்களது குடும்பத்தாரும், அவர்களுக்கு பாபா வழங்கிய அன்புக் குழந்தைகள் நட்சத்திரா, யுவந்திகா ஆகியோரும் எல்லா நலன்களும் பெற்று, ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகின்றோம்.

லீலை 2. மருந்தே தேவையில்லை.

ஒரு வியாழன் அன்று ரேகா என்ற பாபாவின் பக்தை, அவளது தோழியான ரம்யா என்ற பெண்ணைக் குருஜியிடம் அறிமுகப் படுத்தினார்கள். வெளியூரைச் சேர்ந்து அந்தப்பெண் தனது திருமண முடிவால் நிறைய அனுபவங்களையும் சிரமங்களையும் தாண்டி தன் கணவன் ஒரே பெண் குழந்தையுடன் சென்னையில் வசித்து வருகின்றார்கள்.

அவள் குருவிடம் வரும்போது, மிகவும் பலவீனமாக இருந்தாள். அத்துடன் பாபாவிற்கு விரதம் இருக்கின்றேன் என்று பிடிவாதமாக தன் உடலை தானே வருத்திக் கொண்டாள். அவளிடம் குருஜி



குழந்தைகளுடன் சரண்யா- ஞானமூர்த்தி தம்பதியினர்

அவர்கள், உன் உடலில் பசி இருக்கும் போது, மனதில் ஞானம் ஏறாது. தவிர பசியோடு இருப்பது பாபாவிற்கு பிடிக்காது.


சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். சுவரான உடல் கெட்டுப் போய்விட்டால் எதை வைத்து சித்திரம் வரைவது. எனவே உனது விரதங்களை விட்டுவிடவும் என்று கூறி அவளுக்கு யோகா, தியானம் ஆகியவற்றைப் பயிற்றுவித்தார்கள். அதனால் அவள் உடலிலும், மனதிலும் பல மாற்றங்களை உணர்ந்து தேறினாள்.

பின்பு ஒருநாள் அவளது மூன்று வயதான பெண் குழந்தைக்கு பிக்ஸ் வந்து உடல்நலமில்லாது போனது. குழந்தையை தூக்கிக்கொண்டு கணவன் மனைவி இருவரும் குருஜியிடம் வந்தனர்.

அப்பொழுது குருஜி அவர்கள் குழந்தையின் தலையில் தண்ணீர் தெளித்து, பாபாவின் உதி போட்ட நீரை குடிக்க கொடுத்து, கவலைப்பட வேண்டாம் அவள் பாபாவின் குழந்தை. அவளை பாபா பார்த்துக் கொள்வார் என்றார்.

இருப்பினும் அவளுக்கும், அவளது கணவருக்கும் குழந்தைக்கு ஏதேனும் பிரச்சனை இருக்குமோ என்ற பயத்தில் மருத்துவரிடம் சென்றனர். மருத்துவர் எடுக்கச் சொன்ன அனைத்து பரிசோதனைகளையும் எடுத்தனர். பரிசோதனையில் வேறு பிரச்சனைகள் இல்லை என்று தெரியவந்தது.

இருப்பினும் மருத்துவர்கள், பிக்ஸ்க் காக இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும் என்று கூற, அவர்களுக்கு குழந்தைக்கு



தொடர்ந்து மாத்திரைகளை கொடுக்க விருப்பமில்லை. ஏன் என்றால் மாத்திரைகளால் குழந்தைக்கு ஏதும் பின் விளைவுகள் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தார்கள்.

அந்த நேரத்தில்தான் குருஜி அவர்கள் சீரடி புனிதப்பயணம் ஏற்பாடு செய்வதாக அறிவித்தார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கும் சீரடி யாத்திரைக்கு வருவதற்கு விருப்பம் இருந்தாலும் பொருளாதார நிலைகை கொடுக்காததால் தன் விருப்பத்தை மனதிற்குள் அடக்கிக் கொண்டு ஒரு வியாழன் அன்று சத்சங் கத்தில் கலந்து கொண்டார்கள்.

அன்று சத்சங்க முடிவில் குருஜி அவர்கள் சாயி பக்தர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை அறிவித்தார்கள். அதாவது, சீரடிக்குச் சாயிநாதரை தரிசிக்க ஆசைப்பட்டு, செல்ல முடியாத நிலையில் இருக்கும் 20 நபர்களை ஒரு செல்வந்தர்

முழு செலவையும் ஏற்றுக்கொண்டு தரிசனத்திற்கு அனுப்பி வைக்கப் போவதாக அறிவித்திருக்கின்றார்.

அந்த 20 நபர்களை என்னையே தேர்ந்தெடுக்க கூறியிருக்கின்றார். ஆகவே, முதல் நபராக சகோதரி ரம்யா அவரது கணவர் குழந்தை ஆகியோரை அறிவிக்கின்றேன் என்று கூற ரம்யாவின் சந்தோசத்திற்கு அளவே இல்லை.

அதன்பிறகு எல்லோரையும் சேர்த்து ஐமபது பேர் கொண்ட குழுவாக அனை வரும் சீரடிக்கு பயணமானோம். பயணத்தில் குழந்தைக்கு மாத்திரை கொடுப்பதைப் பற்றிய தனது சந்தேகத்தை குருஜியிடம் சகோதரி ரம்யா அவர்கள் விவரிக்க, குருவோ,

சீரடியில் நீ பாபாவை தரிசிக்கும்போது, பாபாவிடம், இன்றிலிருந்து குழந்தைக்கு மாத்திரை கொடுக்க மாட்டேன். இவள் உன் குழந்தை. உன்னை மனப்பூர் வமாக நம்புகின்றேன் என்று முழு சரணாகதிய டைந்து விடு என்று கூற அவளும் அவ்வாறே பாபாவிடம் மனப்பூர்வமாக சரணடைந்தாள்.

அன்றிலிருந்து குழந்தைக்கு மாத்திரை கொடுக்கவில்லை. இன்றுவரை ஐந்து ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. பாபாவின் அருளால் குழந்தை ஆரோக்கியத்துடன் வளர்ந்து வருகின்றாள். அவர்கள் குடும் பத்தினர் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று மனமாற வாழ்த்தி அவர்களது சார்பில் "சாய் தியானாலயா" பகவான் சாயிநாதருக்கு தன் நன்றியினை செலுத்துகின்றது.

பகவான் பாபாவிடம் நாம் முழுமையாக சரணாகதியடைந்தால், எப்போர்பட்ட பிரச்சனைகளையும் நீக்கி அவர் நம்மை காப்பார் என்பதை இக்கதை நமக்கு உணர்த்துகின்றது அல்லவா?

அதே வேளையில் இவர்களை அறிமுகப் படுத்திய சகோதரி ரேகாவைப் பற்றியும் நாம் இங்கே குறிப்பிட வேண்டும். ரேகாவைப் போன்று நம் குருவிடம், குருபக்தி காட் டியவர் யாருமில்லை என்று தான் கூற வேண்டும். ஆம். சாய் தியானாலயா ஆரம் பித்த காலகட்டங்களில் குரு காலை ஆறு மணிக்கெல்லாம் யோகப் பயிற்சி கொடுப்பார். தொடர்ந்து அங்கேயே இருப்ப தால் காலை உணவு எடுத்துக் கொள்ள மாட்டார்.

அக்காலகட்டத்தில் எப்போதாவது பசித் தால் ஒரு சிறிய பேப்பரில் எனக்கு உணவு வேண்டும் என்று எழுதி பாபாவிடம் வைத்து விடுவார். சரியாக அரை மணி நேரத்தில் சகோதரி ரேகா அவர்கள் உணவு சமைத்துக் எடுத்துக் கொண்டு குருவை நோக்கி வருவார். இது ஒருமுறை, இருமுறை அல்ல, பல முறை நடந்திருக்கின்றது.

சில வேலைகளில் நானும் குருவுடன் இருக்கும் போது இரண்டு பேருக்கு உணவு வேண்டும் என்று எழுதி வைப்பார். சிறிது நேரத்தில் சகோதரி எங்கள் இருவருக்கும் உணவை எடுத்துக் கொண்டு வருவார்.

உணவை சமைத்து அதில் கொஞ்சம் எடுத்து இறைவனுக்கு என்று வைக்காமல், எந்த உணவை சமைத்தாலும், அது இறை வனுக்கே என்று சமைத்து அதில் தனக்கு என்று கொஞ்சம் எடுத்துக் கொள்ளும் உன் னத குணம் படைத்தவர் சகோதரி ரேகா.

ஆரம்பகாலகட்டத்தில் குருஜிக்கு உணவுத் தேவையை நிறைவு செய்தவர் சகோதரி அவர்கள். அவரையும் இந் நேரத்தில் நினைவு கூர்ந்து அவர்தம் குடும்பத்தினர் அனைவரும் சாயிநாதரின் அருளோடும், பொருளோடும் வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

– லீலைகள் தொடரும்...

தொடர் –43

குருவைத் தேடி

கேட்டின் வெளியே கறுப்பான ஒரு உருவம் சுருட்டு பிடித்தபடி என்னை நோக்கி வந்தது. குபுகுபுவென வெளியேறிய புகை காற்றில் கலந்து என் நாசிக்காற்றில் நுழைந்தது. அது கஞ் சா வாடை என்பதை நான் உணர்ந்த நேரம் சட்டென்று மயங்கிச் சரிந்தேன்.

நான் கண் திறக்கும்போது காலை மணி ஐந்திருக்கும். அது ஒரு சின்ன குடிசை முழுவதும் புகை மண்டலமாக இருந்தது. என் நாசி நேற்றிரவு சுவாசித்த அதே கஞ்சாப்புகையை மறுபடியும் சுவாசித்தது. நான் சட்டென்று எழுந்து உட்கார்ந்தேன். என் எதிரே ஒரு வயதான கிழவி அமர்ந்திருந்தாள்

முழுச்சிட்டியா, இந்தா எழுந்து இந்த காப்பித்தண்ணிய குடி என்று செம்பில் இருந்து சூடான கடுங்காப்பியை டம்ளரில் ஊற்றிக்கொடுத்தாள்.

நான் அதை உடனே வாங்கி சூடாக அருந்தினேன். கிழவியைப் பார்த்து ஆமா, நீங்க யாரு, இது எந்த இடம் என்றேன்.

அதெல்லாமா நம்மகிட்டே சொல்லிக்கிருக்காங்கே, யாரு எங்கிட்டு போனாகளோ, யாரு கண்டா, நீ காப்பிய குடிச்சுட்டு கிளாச குடு சாமி கழுவி வைக்கனும். இல்லேன்னா அதுக்கு ரெண்டு கிழி கிழிப்பாய்ங்கே! என்று சம்பந்தமில்லாமல் பேசியவாறே என்னிடமிருந்து டம்ளரை வாங்கிக் கொண்டு வெளியே சென்றாள் கிழவி. சற்று நேரத்தில் இந்தா வந்து ட்டாய்ங்கே! அவிங்ககிட்டேயே கேளு! என்ற கிழவியின் குரல் வெளியில் இருந்து கேட்டது.

நான் அந்தக் குடிசையைப் பார்த்தேன் பத்துக்கு பத்து அறைதான்.சுற்றிலும் தென்னங்கீற்றால் வேயப்பட்ட அறை நடுவில் ஒரு மேடையும் அதன் மேல் சிறியதாய் ஓர் லிங்கமும், குடிசைக்கு வெளியே ஓர் நந்தியும் இருந்தது. ஓ! இது ஆலயமா! எனக்குள் சற்று நிம்மதியாய் இருந்தது. அப்போதுதான் இரவில் நடந்ததெல்லாம் என் நினைவிற்கு வந்தது. நான் எழுந்து உள்ளே வரவும் வெளியில் இருந்து வயதான சாமியார் ஒருவர் உள்ளே வரவும் சரியாய் இருந்தது.

தம்பி எங்கே கௌம்பிட்டீங்க! என்றவாறே உள்ளே வந்தார் சாமியார். அவருக்குப் பின்னால் சற்றே இளவயது சாமியார்கள் இருவர் நின்றிருந்தனர். நான் அவர்களை தவிர்த்து பெரிய சாமியாரையே உற்று நோக்கினேன். அவரின் கழுத்தில் சில ருத்திராட்ச மாலைகளும், சிறியதும் பெரிதுமாய் நிறைய மனித மண்டையோட்டு மாலைகளும் கிடந்தன.

இடது கையில் கம்பும், வலது கையில் சுருட்டும் புகைந்து கொண்டிருந்தன. வயதாகிவிட்டதால் தளர்ந்து விட்ட தோள்கள். ஆனால் முகத்தில் கம்பீரம். முறுக்கிவிடப்பட்ட மீசை, நீண்ட தாடி. பற்கள் ஒன்றுகூட விழாதது எனக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.

அவரைப் பார்த்த கண்களை

வேறு பக்கம் திருப்பாமல் நேற்றிரவு கிழக்குத் தோட்டத்திற்கு நீங்கள் தான் வந்தீர்களா? நீங்கள் யார் சுவாமி என்றேன் நான்.

என் கேள்வியை அவர் காதில் வாங்கியதாகவே தெரியவில்லை. காப்பித்தண்ணி குடிச்சீகளா சாமி என்றவாறே என்னை புதிதாகப் பார்ப்பது போல வியப்பாகப் பார்த்தார். அப்படியே இருக்காகளே! சாமியப் பார்த்து எத்தனை வருசமாச்சு! என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

நான் இப்பத்தான் குடிச்சேன் என்றேன், அவர் அதையும் காதில் வாங்கிக் கொண்டதாக தெரியவில்லை. சுவாமி நேற்றிரவு நடந்ததெல்லாம் உங்களுக்கு முன்பே தெரியுமா? தெரியாதா? என்றார் என்னைப் பார்த்து.

என்னை அவர் சுவாமி என்று அழைத்தது எனக்கு வியப்பாய் இருந்தது. நேற்றிரவு நடந்ததெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கின்றது. ஆனால் இப்படி நடக்கும் என்று எனக்கு முன்பே தெரியாது என்றேன் நான்.

அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு கூறினார். நீங்கள் ஒன்றும் தெரியாதது போல் விளையாடுறீங்க சரிதானே! ஆனா எங்களுக்கு கஞ்சா சாமி ஏகப்பட்ட வேலைகள் கொடுத்திருக்காரு. தயவு செய்து விளையாடாம நாங்க சொல்றதக் கேளுங்க என்றார்.

அப்ப கஞ்சா சாமியார் யார்? அவர் எங்கிருக்கிறார் என்றேன். அவர் வரும் போது வருவார். அதுவரை தயவு செய்து நாங்கள் சொல்வதை கேளுங்கள். இனிமேல் நீங்கள் கிழக்குத் தோட்டத்திற்கு போகக்கூடாது.



உங்களை இந்த ஊரை விட்டு அனுப்ப ஒரு கூட்டம் திட்டமிடுகின்றது. அது நடந்தால் இறைவனின் திட்டத்திற்கு பங்கம் ஏற்படும். அப்படி ஆகக்கூடாது.

அப்படி ஆகக்கூடாது என்றால் ஆண்டாண்டு காலமாய் இங்கிருக்கும் சைவத்தை விரட்ட வந்த அவர்களை இங்கிருந்து அகற்ற வேண்டியது தானே! அதை விட்டுவிட்டு என்னை போகக்கூடாது என்கின்றீர்களே! என்றேன்.

இல்லை! சுவாமி நீங்கள் எதுவும் தெரியாதது போல் கேள்வி கேட்கின்றீர்கள். இருந்தாலும் பதில் சொல்கின்றேன். இது காலத்தின் கட்டாயம். அவர்கள் வரவில்லை என்றால் நம்மை பற்றி நமக்கே தெரியாமல் களிமண் போல் இருந்திருப்போம். அவர்களைப்போல் பலர் இங்கு வந்து நம்மை அடிமைப்படுத்திய போதுதானே நாம் யார் என்ற உணர்வே நமக்கு வந்தது.



அதுவும் சரிதான். ஒத்துக் கொள்ள வேண்டியதை ஒத்துக் கொண்டுதானே ஆக வேண்டும்! என்றேன்.

சரிதான்! நீங்கள் உங்களது தவச்சாலையை மட்டும் கவனியுங்கள். மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். வரும் பௌர்ணமிக்கு இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றது. அன்று காலை கஞ்சா சுவாமிகள் உங்களை உங்களது இடத்தில் சந்திப்பார். இது அவரே கூறிய செய்தி! அவருக்காக காத்திருங்கள். மற்றதை எல்லாம் அவரே உங்களிடம் தெரிவிப்பார். எங்களுக்கு விடை கொடுங்கள். என்றவாறு என்னருகிலேயே நின்றிருந்தனர்.

விடை கொடுங்கள் என்று எனனருகிலேயே நிற்கின்றார்களே! எனக்கு சிறிது நேரம் கழித்துத்தான் புரிந்தது. அவர்கள் இடத்தில் தான் நான் இருக்கின்றேன். நான் தான் அங்கிருந்து வரவேண்டும். புறப்படுங்கள் என்பதை மரியாதையாகக் கூறுகின்றார்கள் என்பதை புரிந்து கொண்டு குடிசையை விட்டு வெளியேறினேன்.

காலை மணி எட்டு, குடிசையை விட்டு வெளியேறியதும் தான் அது எந்த இடம் என்றே எனக்குத் தெரிந்தது. எங்கள் ஊரின் ஒதுக்குபுறத்தில் ரயில்வே கேட்டை தாண்டியதும் தென்படுகின்ற சிவன் கோவில் அது. சிதிலமடைந்த கோவில் தான். ஊரில் உள்ள இளைஞர்கள் சிலர் அதை சரிப்படுத்தி கொட்டகை போட்டு மக்களின் வழி பாட்டிற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இருந்தாலும் பிரதோசத்திற்கு மட்டும் தான் கோவிலுக்கு ஆட்கள் வருவார்கள். மற்ற நேரத்தில் ஆள் அரவமற்று கிடக்கும்.

நான் அங்கிருந்து வெளியேறி சற்று தூரம் தான் நடந்திருப்பேன். காலைகடனை கழிக்க காட்டிற்கு சென்றுவிட்டு என் தந்தையின் பால்யகால நண்பர் ஒருவர் எதிர் திசையில் வந்தவர் என்னைப் பார்த்துவிட்டார். நண்பரின் மகன் என்பதால் என்னிடம் மிகுந்த பாசமாக இருப்பார். உறவுகள் எல்லாம் எனக்கு உதவி செய்ய மறுத்த நேரத்தில் எனக்காக நிறைய உதவிகள் செய்திருக்கின்றார்.

என்னைப்பார்த்தவர், ராமு என்ன கஞ்சா சாமியார் சமாதிக்குப் போயிட்டு வர்றீயா என்றார். எனக்கு தூக்கிவாரிப்போட்டது. என்னது கஞ்சா சாமியார் சமாதியா, இல்லப்பா சிவன் கோவிலுக்கு என்றேன். அதுதானப்பா கீத்த வைச்சு கொட்டகை போட்டிருக்கான்களே அங்கனதானே! என்றார். ஆமாப்பா என்றேன்.

அதான் கஞ்சா சாமியார் மடம். உனக்கு தெரியாதா? 350 வருசத்துக்கு முன்னாடி அங்க வாழ்ந்ததா சொல்வாங்க. எப்பப்பார்த்தாலும் கஞ்சா அடிச்சுக்கிட்டு. ராத்திரி பகலுன்னு இல்லாம நெருப்ப சுத்தி, சுத்தி வந்து

ஹர் ஹர் மகாதேவ்ன்னு சொல் லிக்கிட்டே நிர்வாணமா ஆடுவாராம்.

அவரு பிடிக்கிற கஞ்சாவிற்கு ஆசைப்பட்டு ஊரு இளந்தாரிக்க அவருகிட்டே போயி கெட்டுப் போறாங்கன்னு சொல்லி இளந்தாரிங்க யாரும் கஞ்சா சாமி மடத்துக்கு போகக்கூடாதுன்னு ஊருலே கட்டுபாடு போட்டாங்களாம். அதையும் மீறி இளைஞர்கள் பலர் அவருக்கு சீடர்களா இருந்திருக்காங்க! இவரு காசியிலே இருந்து தன் குருவை தேடி இங்க வந்ததா சொல்வாங்க.

இப்பவும், ஊருக்கும், வீட்டுக்கும் அடங்காதவனுங்கதேன் அங்கனபோயி கிடப்பாய்ங்க, நீ ஏன் அங்கிட்டு போறே! என்றார். சரிப்பா இனிமே அங்கே போகவில்லை என்றேன்.

வெறும் வாய் வார்த்தையில் அங்கே போகவில்லை என்று கூறிவிட்டேனே தவிர என் மனமெல்லாம் அங்கேயே தான் திரிந்தது. 350 வருசத்திற்கு முன்பே சமாதியானவர் எப்படி என்னைப் பார்க்க பௌர்ணமி அன்று வருவார். எனக்குள் திகிலும் எதிர்பார்ப்பும் அதிகரிக்க ஆரம்பித்தன.

நான் பௌர்ணமிக்காக காத்திருக்க ஆரம்பித்தேன்.

நாட்கள் ஒவ்வொன்றும் வருடமாக கழிந்தன. என்னால் காத்திருக்க முடியவில்லை. இந்த உலகத்தில் ஏதோ ஒன்றுக்காகவோ, யாருக்காகவோ, காத்திருப்பதுதான் மிகவும் கஷ்டமான வேலையாகும். ஆனால் ஆன்மீகத்தில் இந்தக் காத்திருப்பே பல உன்னத அனுபவங்களை தரும் என்பது எனக்கு அப்போது புரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

என்னால் இருப்பு கொள்ளவில்லை. கரட்டில் இருக்கும் சிவன்கோவில் சென்று வரலாம் என்று புறப்பட்டேன். கோவிலில் ஏற்கனவே எங்களை பயமுறுத்திய பூசாரி ஆனந்த் மட்டும் இருந்தார். நான் சென்றதும் என்னை அன்போடு வரவேற்றார். அன்று நிகழ்தவற்றிற்கு என்னை மன்னிக்கவும். உங்களை எனக்கு யார் என்று தெரியாது. மலையாளத்து சாமிதான் உங்களைப் பற்றி கூறினார்.

உங்களை சந்தித்ததில் ரொம்ப சந்தோசம். நான் அடுத்த மூன்றாம் வருடம் மகா சிவராத்திரி அன்று சீவசமாதி ஆகப்போறேன். சுவாமி சொல்லீருப்பாரே என்றார்.

ஆமாம் சொன்னார் என்றேன் தயங்கியபடி. பிறகு அதை ஏன் நீங்க தள்ளிப்போடக் கூடாது என்றேன் நான்.

அது முடியாது, அது ஏற்கனவே முடிவானது. எனக்கு இப்போது 23 வயது 26 வயது வரைதான் இந்த பூமியில் இருப்பேன். அதன்படி வருகின்ற மகாசிவராத்திரி அன்று எனக்கு 26 வயது பூர்த்தியாகின்றது. அன்று இரவு நான் இந்த பூமியில் இருந்து புறப்பட்டே ஆக வேண்டும்.

அதற்கு நான் என்ன செய்ய வேண்டும், என்றேன் நான். நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். இந்த சென்மத்தில் 26 வது வயதில் நீ சமாதி ஆவாய் அதன்பிறகு உனக்கு அடுத்த பிறவி கிடையாது. என்று எனக்கு ஆசியளித்தவரே நீங்கள்தான் அதை நிறைவேற்றுவதற்கு எனக்கு உறுதுணையாய் இருக்க வேண்டும் என்றார் அகோரி ஆனந்த்.

நான் அவருக்கு உறுதியளித்தேன். பிறகு நேரம் போவதே தெரியாமல் மணிக்கணக்கில் இருவரும் தவத்தில் இருந்தோம். இரவு நேரத்தில் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினேன்.



ஆயிற்று இன்னும் நான்கு நாட்கள்தான். அப்போது எனது பிழைப்பிற்காக குளிர்பானங்கள் தயாரித்து விற்பனைக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். எனது குளிர்பானங்களை தொடர்ந்து வாங்கிக்கொண்டிருந்த ஒரு வியாபார நிறுவனம். திடீரென வாங்குவதை நிறுத்திவிட்டது. காரணம் கேட்டபோது வேறு ஒரு புதிய கம்பெனி குறைந்த விலைக்கு தருவதாக சொல்லப்பட்டது. அது எந்த கம்பெனி என்று நான் விசாரித்தபோது அதனை நிர்வகிப்பவரே என்னை வந்து சந்திப்பதாக தகவல் அனுப்பி யிருந்தார்.

நான் அவருக்காகவும் காத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானேன். அயிற்று பௌர்ணமியும் வந்தது. நான் காலையில் இருந்து கஞ்சா சாமிக்காக தயாராக இருந்தேன். குளிர்பான கம்பெனி நிர்வாகியை மறந்தே போனேன். ஆனால் வந்ததோ

குளிர்பான கம்பெனி நிர்வாகி. ஓர் பழைய சைக்கிளை தள்ளிக்கொண்டு இருவர் என் கடை வாசலுக்கு வந்தனர். சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்தவர், இங்க யாருங்க ராமு, இவர்தான் கூல்ரிங் கம்பெனி ஓனரு. என்று அவரின் பின்னால் இருப்பவரை சுட்டிக் காட்டினான்.

அவரோ சட்டென்று என் கடைக் குள் வந்து என்னை நோக்கி கைகளைக் கூப்பி வணங்கினார். பிறகு அவரே ஒரு சேரை இழுத்துப்போட்டு கொண்டு அமர்ந்தார். சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்தவன் சொல்லாமல் கொள்ளமல் உடனே அங்கிருந்து சென்று விட்டான்.

வெடவெட வென்ற தேகம். குளித்து பல நாள் ஆகியது போன்ற தோற்றம். பரட்டை தலை. ஒடுக்கு விழுந்த கன்னங்கள். ஆட்டுதாடி. குழிவிழுந்த கண்கள். ஆனால் அதற்குள்ளிருந்து நேரான பார்வை. அழுக்கடைந்த வேட்டி, அரைக்கை சட்டை. நெஞ் சில் சிலுவை? ஆடிக்கொண்டிருந்தது.

வணக்கம் வாருங்கள், யார் நீங்கள் என்றேன். அவர் பேசவில்லை. தோளில் தொங்கிய சோல்னா பையில் இருந்து ஒரு பேப்பர் பேடையும், பேனாவையும் எடுத்துக் கொண்டு என்னைப் பார்த்து வறட்சியாய் சிரித்துவிட்டு அதில் எழுத ஆரம்பித்தார்.

இவர்தான் குளிர்பான கம்பெனியின் ஆளாக இருக்க வேண்டும் என்று நான் சிந்திப்பதற்குள் எழுதிய பேடை என்னிடம் நீட்டினார். நான் அதை அவரிடம் இருந்து வாங்கிப் படித்தேன்.

வணக்கம், "கஞ்சா சாமியார்" என்று எழுதியிருந்தது. நான் அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவர் என்னை சிநேகமாய்ப் பார்த்து சிரித்தார்.

- (தொடரும்...)

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தொடர் –7

சாய் சரவணன்

"அதி தேவதை"

சுந்தராபாய் ஷீர்ஸாகர் தன் பிரபுவான ஸ்ரீ பாண்டுரங்கனின் இச்சைப்படி, தன் சற்குருவைத் தேடி புனித யாத்திரைக்குப் புறப்பட்டு சந்திரபாகா நதிக்கரைக்கு வந்தாள் என்பதைக் கண்டோம்.

துக்காராம் யாத்திரைக்குச் சென்ற சமயம் சிறு குழந்தையைப் போல திரும்பத் திரும்ப விட்டலனையே பார்த்துக் கொண்டே சென்றதைப் போன்று, சுந்தராபாயும் தன் ஆத்மா வோடு கலந்துவிட்ட விட்டலனையே திரும்பப் பார்த்துக் கொண்டே அவன் நாமத்தைப் பாடிக்கொண்டே தன் லட்சியத்தை நோக்கி நடந்தாள்.

யாத்திரை தொடங்கிய சிறிது நேரத்தில் பாண்டுரங்கனே அவள் மீது கருணை கொண்டு அவளை வழியனுப்ப வந்தது போன்றதொரு சம்பவம் ஒன்று அங்கே நடந்தது.

ஓர் வயதான பாகவதர் ஹரி நாமம் பாடிக்கொண்டு சுந்தராபாயின் அருகில் வந்து நின்றார். சுந்தராபாயோ குனிந்த தலை நிமிராதவள். பாகவதரோ அவளை பேரன்போடு, குழந்தாய் தாங்கள் எங்கே செல்கின்றீர்கள் என்பதை நான் அறியலாமா? என்றார்.

சுந்தராபாய் சற்றே தலை நிமிர்ந்து தன் முன் நிற்கும் பாகவதரை வணங்கி, நான் என் பிரபு விட்டலனின் இச்சைப்படி யாத்திரை செல்கின்றேன் என்றாள்.

ஓ! அப்படியா உன் பிரபு என்று கூறினாயே அவர் யார்?

புண்டரீக வரதனான ஸ்ரீ பாண்டுரங்கனே என் பிரபு, என் பதி, என் தாய், தந்தை எல்லாம் அவரே!

அவனிடத்தில் எப்படி இவ்வளவு பக்தி கொண்டாய் என்பதை நான் அறியலாமா? என்றார் பாகவதர்.

பகவானிடத்தில் நான் கொண்ட பிரேமை சென்ம சென்மங்களையும் கடந்தது என்பதை நான் அறியேன். ஆயினும் அவன் மீது கொண்ட பக்தியின் பலனே இன்று அவன டியைச் சேர குருவடியை நாடிச்செல்ல வைத்திருக்கின்றது. இந்த சென்மம் பிறவிப்பயனை அடையும் என நம்புகின்றேன்.

ஆகா! என்ன பதில். அவன் மீது நீ கொண்ட பக்தியும், உன் நம்பிக்கையும் உன் சற்குருவிடம் உனைக் கொண்டு சேர்க்கும் என்று அவளை வாழ்த்தினார் பாகவதர்.

சுந்தராபாயி பாகவதரை நன்றாக முழுமையாக நிமிர்ந்து பார்த்தாள். என்ன ஒரு தேஸஸான முகம். அந்த விட்டலனே என்னை வாழ்த்தி வழி அனுப்புகின்றானோ! சுவாமி தங்களது ரூபத்தில் நான் என் விட்டலனையே காணுகின்றேன் என்றவாறே அவரின் பாதத்தில் பணந்து எழுந்தாள்.

பாகவதரோ மனமார வாழ்த்தி, தன் கழுத்தில் அணிந்திருந்த துளசி மாலையை கழற்றி சுந்தராபாயின் கழுத்தில் அணிவித்தார். உன் கழுத்திற்கு வந்து சேர்ந்த துளதி மாலை நீ செய்த பக்தியின் பயனாய் வந்து சேர்ந்தது. ஏனென்றால் இம் மாலை ஹரியின்மார்பில் தவழ்ந்தது. இப்போது அது உன்னிடம் வந்தி ருக்கின்றது. இந்த பிரசாதமே உன்னை காக்கும். உனக்கு துணையாக வரும் என்று கூறி வந்த வழியே சென்று மறைந்தார்.

சுந்தராபாயி, ஹே, பிரபு நான் பண்டரியின் எல்லையைத் தாண்டும் முன் நீ இந்த வயதான பாகவதரை அனுப்பி உன் மார்பில் தவழ்ந்த துளசிமாலையை எனக்கு பிரசாதமாக அனுப்பிய கருணைக்கடலே! பண்டரிநாதா! பிரபு நீயே எனது துணை எனக்கூறி தன் யாததிரையைத் தொடங்கினாள்.

உண்மையில், பகவானை அடைய வேண்டும் என் ஒரே லட்சியத்தோடு பல பக்தர்கள் தன் சற்குருவை காண்பதே தனது ஒரே லட்சியம் என யாத்திரை சென்ற பல சம்பவங்களை நாம் அறிவோம்.

உண்ண உணவோ, குடிக்க நீரோ, என தன் உடலுக்கு தேவையாவற்றை உதாசினம் செய்து கிளம் பினார்கள். அப்படிப்பட்ட வைராக் கியத்தோடு புறப்பட்ட எந்த ஒரு பக்தரையும் பகவான கை விட்டதாக சரித்திரம் இல்லை.

யாத்திரையில் அவர்களுக்குத் தேவையானவற்றை யார் மூலமாகவும் அளித்து அவர்களது தேவைகளை நிறைவேற்றி, தன்னை நோக்கி இழுத்துக் கொண்டு அவர்களது லட்சியத்தை அடைய வைத்து மகிழ வைப்பான். இந்த உலகமே அவனது லீலைதானே!

சுந்தராபாயியும் எல்லாவற்றையும் மறந்து, தன்னந்தனியாக விட்ட லனின் பக்தையாக மட்டும், தன் பயணத்திற்காக எந்தவித திட்டத்தையும் வகுக்காமல், பகவானையே நம்பி, அவனே வழிகாட்டி, என்னை என் சற்குருவே வந்து அழைத்துக்கொள்வார் என நம்பிக்கை கொண்டு நடந்தாள்.

இரவு பகல் பாராது காலில் கலணிகூட இல்லாது, கரடுமுரடான



குருவின் அவசியம்

1.நான் யார்? 2.இப்பிறவியின் நோக்கம் என்ன? 3.நான் இவ்வுடலை ஏன் எடுத்தேன்? 4.இவ்வுடல் என்றால் என்ன? 5 உயிர் என்றால் என்ன? என்று பல கேள்விகள்.

எவர் ஒருவர் தனது பிறப்பின் நோக்கம் அறிந்தவரோ அவரே வாழ தகுதியுடையவராகிறார். அவர்களால் மட்டுமே மீண்டும் பிறவாமை என்ற நிலையை அடைய முடியும்.

எவ்வாறு இந்நிலையை அடைய முடியும் என்றால் அதற்கு, ஒரு குரு இருந்தால் மட்டுமே முடியும். அக்குருவை நான் எவ்வாறு அடைய முடியும் என்றால்?

குருவே சிவமெனக் கூறினன் நந்தி

குருவே சிவம் என்பது குறித்து ஓரார்

குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்

குருவே உரை உணர்வு அற்றதோர் கோவே.

ஒரு வருடம் தவமிருப் பார் திருமூலர் பெருமான். ஒரு பாடலைப் பாடுவார். மீண்டும் தவத்தில் மூழ்குவார். ஒருவருடம் முடிந்ததும் தவத்தால் தாம் பெற்ற அனுபவத்தை ஒரு பாடலாகப் பாடுவார். அப்படி மூவாயிரம் ஆண்டுகள் தவமியற்றி மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை அருளிச் செய்தார் திருமூல நாயனார்.

குருவின் அவசியம் பற்றி மேலே உள்ள பாடலை கொஞ்சம் சிந்தியுங்கள். கடவுள், மனித உருவத்தில் தம்மைத் வெளிக்காட்டிக் கொள்ளும் பெரிய அவதாரங்களே குருமார்கள். அவர் களைக் கடவுளாகவே நினைத்துப் போற்ற வேண்டும். குருமார்கள் எல்லாம் கடவுளின் பிரதிநிதிகள் என்றே கொள்ள வேண்டும்.

சிவபெருமானின் ஆணையை ஏற்று இவ்வுலகிற்கு நலம் செய்வதற்காகவே பிறப்பெடுக்கும் புண்ணிய மூர்த்திகளே குருமார்கள். பழகிய யானையைக் கொண்டு புதிய யானையைப் பிடிப்பது போல, நம்மைப் போலவே மானிட வடிவம் தாங்கிக் கடவுளே நம்மை உய்விக்கக் குருவடிவில் வருவதாகக் கொள்ள வேண்டும்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருமான் போன்றவர்கள் இல்லை என்றால் உலகில் அன்பு நெறி காணப்படுமா?



கட்டையில் நெருப்புள்ளது. அந்த நெருப்பினை (ஒளியை) வெளியே கொண்டுவர, வேறு ஒரு கட்டை வேண்டும். வேறு ஒரு கட்டையுடன் சேர்த்து உரசும் பொழுது, கட்டையினுள்ளிருக்கும் நெருப்பு (ஒளி) வெளியே வருகிறது. அதைப்போல நம் உள்ளேயிருக்கும் ஆன்ம ஒளியை, மனித வடிவம் தாங்கி வரும் குருவால் தான் வெளியே கொண்டுவர முடியும்.

பசுவிடம் பால் பெறுவதற்கு கன்றுக்குட்டி அவசியமாதல் போல, சிவ பெருமானது திருவருளைப் பெறுவதற்குக் குருவருள் அவசியமாகும்.

சூரிய காந்தக் கல்லின் மீது சூரிய ஒளி பட்டவுடன் நெருப்பு எழுவது போல, குருவின் அருட்பார்வை நம்மீது பட்டவுடன் மெய்ஞானம் தோன்றும். குருவினால் இப்பிறவியில் பெறும் ஞானம் (அறிவு) அடுத்து எடுக்கின்ற பிறவிகள் தோறும் தொடர்ந்து வருவதாகும்.

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்க"

"கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக"

என்றும் திருமூல நாயனார் அறிவுறுத்துகின்றார். போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம் என்பதே இதன் உட்பொருள். பிறகு குருடும் குருடும் கூடிவிளையாடி குழியில் விழுந்தாற் போலாகிவிடும்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார் குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர் குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக் குருடுங் குருடும் குழிவிழுமாறே

குருட்டினை நீக்குதல் = அறியாமையை நீக்கு தல். குருடு=அறிவிலி குழிவிழுதல்=துன்பத்திற்குள்ளாதல்

அறியாமையைப் போக்கும் நல்லாசிரியரையே தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் தெளிவு பெற்றவராகயிருத்தல் வேண்டும்.

குரு என்பவர் வாழ்ந்து காட்டுபவர் ஆவார். அவர் வாழும் வாழ்க்கையே பாடமாக அமையும். குரு உலகத்தின் மீது பற்றற்றும், சிவத்தின் மீது மாறாத அன்பும் உடையவராகத் திகழ்வார். அவரால் உலகம் பல நன்மைகளை அடையும். அத்தகைய குருவின் திருமேனியைக் கண்டாலே புண்ணியம் என்கிறார் *திருமூலர்*.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்

தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

மாதா, பிதாவால் நம் ஜனனம் நிகழ்கிறது. இந்த பிறப்பை அர்த்த முள்ளதாகச் செய்பவர்கள் நம் ஆசிரியர்களே! குருவருளால் தான் திருவருள் நீ இறைவனின் அருள் கிடைத்து நிம்மதியாக வாழ முடியும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு, "அ"வில் துவங்கி, உயர்கல்வி வரை கற்றுத் தந்து அவர்களை சீர்திருத்தும் சிற்பிகள் ஆசிரியர்களே! ஆசிரியர்கள் சொன்னதைக் கேட்டு எந்த ஒரு மாணவன் தன்னை சீர்படுத்திக் கொள்கிறானோ, அவன் பிற்காலத்தில் நிம்மதியாக இருப்பான்.

பகவான் கிருஷ்ணரும், குசேலரும் பள்ளிக்கூட நண்பர்கள். அக்காலத்தில் குருகுலத்தில் படிக்கும் மாணவர்கள், அங்கேயே தங்கிப் படிக்க வேண்டும்; பள்ளி நேரம் தவிர, மற்ற சமயங்களில்



குரு இடும் கட்டளைகளைச் செய்ய வேண்டும். ஒருநாள், இவர்களது குரு சாந்தீபனி முனிவரின் மனைவி, கிருஷ்ணரையும், குசேலரையும் சமைப்பதற்கு விறகு பொறுக்கி வரச்சொல்லி விட்டாள்.

குருவின் மனைவியின் கட்டளையை ஏற்ற அந்தக் குழந்தைகள், காட்டில் சென்று விறகு பொறுக்கினர். மழை வந்துவிட்டது. விறகு நனையாமல் இருக்க, ஒரு மரப்பொந்தில் அதை வைத்துவிட்டு, மழையில் நனைந்தபடி நின்றனர். இருட்டி விட்டது. குழந்தைகளைக் காணாத குரு, மனைவியைக் கடிந்து கொண்டு குழந்தைகளைத் தேடிச்சென்றார்.

குரு பத்தினியின் கட்டளையை நிறைவேற்ற விறகை மறைத்து விட்டு, மழையில் அவர்கள் நனைந்தது கண்டு கண்ணீர் வடித்தார். "நீங்கள் மிக நன்றாக இருப்பீர்களள் என ஆசீர்வதித்தார். அவரது ஆசீர்வாதம் பலித்தது. துவாரகையின் மன்னரானார் கிருஷ்ணர். ஏழையான குசேலர், தன் நண்பனின் உதவியால் பெரும் செல்வந்தரானார்.

குருவின் சொல்லை இளமையில் கேட்டு நடப்பவர்கள் எதிர்காலத்தில் செல்வந்தர்களாக விளங்குவர்.

நம்மில் குரு அருள் நிரம்புவதை எப்படி கண்டறிந்து கொள்வது?

நினைத்த மாத்திரம் நம்மில் பொங்கும் பிரபஞ்ச ஒருமை உணர்வு, எண்ணங்களில் சீர்மை, அகத் தாய்ந்த எண்ணங்களே சொல்லாய் செயலாய் வெளிப்படல், புலனின்ப உணர்வுகளில் அளவு முறை, தவறாது அனைத்திடமும் பொங்கும் அன்பு, நிறை மனம், உள்ளுணர்வு, விளைவை ஆராய்ந்த செயல் முறை, சினமின்மை, கவலையின்மை, இன்ன பிற பண்புகளால் அறியப்படுவார் குரு.

"சத்குருவின் அருளால் மனதைச் சும்மா இருக்க செய்தாலன்றி எல்லாரும் விரும்பும் அமைதியை எவராலும், எவ்வழியிலும், எவ்வேளையிலும், எவ்விடத்திலும் எவராலும் அடைய முடியாது" என்பார் *இரமணர்*

தகப்பனுக்கே உபதேசம் செய்து குருசுவாமியாகியவர் முருகன். ஆகவே குருவுக்கு வயது என்பது இல்லை. குருவானவர் எந்த வயதினராகவும் இருக்கலாம். எந்தப் பாலினத்தவராகவும் இருக்கலாம்.

போலிக் குருவை அடையாளம் கண்டு கொண்டால் உண்மைக் குருவை யார் என்று தெரிந்து கொள்ளலாம்.

"ஆமாது அறியாதோன் மூடன்

அதிமூடன்

காமாதி நீங்காக் கலதி கலதிகட்கு
ஆமாறு அசத்துஅறி விப்போன்
அறிவிலோன்

கோமான் அலன்அசத் தாகும்
குரவனே" என்கின்றது திருமந்திரம்

"வீணான நினைவுகளை விடாமல் எண்ணுபவர் செய்யும் உபதேசத்தில் சிவத்தியானம் சிறந்து வெளிப்படாது தீமைகளே வெளிப்படும். அவ்வுதேசத்தைக் கேட்பவர் அறிவு கெடும். அக்குருவால் வாழும் நாட்டுக்கும் அரசுக்கும் தீங்கு வரும்" என்கிறார் போலிக் குரு பற்றி திருமூலர்.

குரு ஒளியாயிருக்கிறார், சீடனுக்கு ஒளியை வழங்குகிறார், சீடனின் மனதில் இருக்கும் இருளை போக்குகிறார், சீடனை ஒளிமயமாக்குகிறார். ஆகவே எவர் சிந்தனைகள், சொற்கள் உன்னை தெளிய வைக்கிறதோ அவரே உனது குரு ஆவார் என்கிறார் *சட்டைமுனி*.

நன்றாக கவனியுங்கள் உம்மை உமக்கே நான் யார் என்று "தெளிய வைப்பவரே" குரு எனப்ப டுவார். ஆகவே, *உங்களைத் தெளிய வைப்பவரை உணர்வது உங்கள் உள் ளுணர்வேயாகும். அந்த உள்ளுணர்வு உங்கள் குருவை உங்களுக்கு அடையாளம் காட்டும் என்கிறார்கள் சித்தர்கள்.

குரு வாழ்க!
குருவே தெய்வம்!

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

குண்டலினி யோகம்

இந்து மதத்தில் மிக முக்கிய அங்கமாக "யோகம்" இருக்கிறது. அடிப்படையான உயிராற்றல் அல்லது உயிர் சக்தியை குண்டலினி என்பார்கள்.

யோகா மற்றும் தியானங்களில் திளைத்தவர்கள் அதன் சக்தியையும் மேன்மையையும் அறிவார்கள். இந்து மதத்தில் பாம்பு பெரும்பான்மையான இடங்களில் வணங்கப்படுகிறது. கடவுளர்களும் பாம்புடன் இருப்பதைப் பல இடங்களில் "சிலை" வடிவத்தில் உணர்த்தியிருக்கிறார்கள். உண்மையில் பாம்பு வடிவம் குண்டலினி சக்தியைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது.

ஏன் பாம்பு என்ற கேள்வி எழலாம். ஒரு பாம்பு அசையாமல் இருக்கும் போது அது இருப்பதே தெரியாது. ஆனால் அது சரசர வென்று ஓடும்போது தான் அது இருப்பதை நாம் நன்கு தெரிந்து கொள்ள முடியும். குண்டலினியும் இந்தப் பாம்பு போன்றது தான். இந்த சக்தி நிலை ஒவ்வொரு மனிதனின் முதுகுத் தண்டின் அடிப்பகுதியில் அமைதியாய் இருக்கும்.

அது அமைதியாய் இருக்கும் வரையில் நமக்குள் சக்தி இருப்பதே தெரியாது. தியானம் மூலம் அதை எழுப்பும் போது தான் அதன் அளவிட முடியாத பேராற்றலும் மகத்துவமும் நமக்குப் புரியும். குண்டலினியை எழுப்பினால் என்ன செய்ய முடியும் என்று சொல்வதற்கு முன் மனித உடலில் உள்ள ஆற்றல் மையங்களைப் பற்றி கொள்வது அவசியமாகிறது.

மனித உடலில் உள்ள 7 சக்கரங்கள்:

சாதாரணமாக மனிதன் உட்கொள்ளும் உணவு செரிக்கப்பட்டு ஆற்றலாக மாற்றப்படுகிறது. அது என்ன உணவாக இருந்தாலும் அதில் உள்ள புரதம், கொழுப்பு எதுவாயினும் இறுதியில் பிராண சக்தியாக மாற்றப்படுகிறது. இந்தப் பிராண சக்தியே வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.இந்தப் பிராண சக்தி மனித உடலில் உள்ள சுமார் 72 ஆயிரம் நாடிகள் வழியாகப் பாய்கிறது.

இந்த 72 ஆயிரம் நாடிகளும் 7 முக்கிய மைய நாடிகளில் இணைகிறது. இவற்றையே மனித உடலில் 7 சக்கரங் களாக சொல்லப்பட்டுள்ளது. இவையே ஆற்றல் மையங்கள் (சக்கரங்கள்). இந்த 7 சக்கரங்கள் தான் ஒவ்வொரு மனிதனின் செயல்கள், சாதனைகள், சாதகங்கள், பாதகங்கள் ஆகிய அனைத்துக்கும் காரண மாக இருக்கின்றன. மனித உடலில் உள்ள இந்த 7 சக்கரங்களையும் ஒவ்வொன்றாகக் கீழிருந்து மேலாகக் காணலாம்.

மூலாதாரம்:

ஜனன உறுப்பிற்கும், ஆசன வாய்க்கும் இடையில் அமைந்துள்ளது. இந்தச் சக்கரத்தின் முக்கிய செயல்பாடு அனுபவம் மற்றும் தகவல் சேகரிப்பு ஆகும். இந்த சக்கரம் நன்கு தூண்டப்பட்டால், உணவு உறக்கத்தின் மீது நாட்டம் அதிகமாகும். இந்த மூலாதாரச் சக்கரம் தான் மனிதனின் வளர்ச்சிக்கு அடிப்படையான முக்கிய

தூண்டு சக்தி ஆகும். இந்தச் சக்கரம் பஞ்ச பூதங்களில் நிலத்துக்கு நிகராகச் சொல்லப்படுகிறது. இங்கு சுரக்கும் சுரப்பியின் பெயர் கோணாடு சுரப்பி. கனவு காண்பதற்கு காரணமான சக்கரம் இதுவே.

சுவாதிஷ்டானம்:

இது ஜனன உறுப்பில் இருந்து நான்கு விரற்கடைக்கு மேலாக அமைந்துள்ளது. இந்தச் சக்கரத்தின் முக்கிய செயல்பாடு இன்பம் ஆகும். இந்தச் சக்கரம் நன்கு தூண்டப்பட்டுள்ள மனிதன் உலக வாழ்க் கையில் இன்பங்களை அனுபவிக்க நாட்டம் கொள்வான். இந்தச் சக்கரம் நீர்த் தத்துவத்துக்கு உதாரணமாகச் சொல்லப்படுகிறது. அட்ரீனல் சுரப்பி சுரக்கும் சக்கரம். மனிதனுக்கு பயத்தை ஏற்படுத்தக்கூடிய சக்கரம் இது.

மணிப்பூரகம்:

இது தொப்புளுக்கு அருகில் அமைந் துள்ளது. இந்தச் சக்கரத்தின் முக்கிய செயல்பாடு முயற்சி மற்றும் உழைப்பு ஆகும். மணிப்பூரகம் நன்கு தூண்டப்பட்ட மனிதன் கடும் உழைப்பாளியாக வாழ்வில் சிறந்து விளங்குவான். இந்தச் சக்கரம் நெருப்புத் தத்துவத்தைக் குறிக்கின்றது. இதுவே பாங்கிரியாஸ் சுரப்பி எனப்படும். கவலைக்கு காரணமான சுரப்பி.

அனாகதம்:

இது நெஞ்சுப் பகுதியில் அமைந் துள்ளது. இந்தச் சக்கரத்தின் முக்கிய குணங்கள் அன்பு, மன உறுதி மற்றும் படைப்பாற்றல் ஆகும். இது காற்று தத்துவத்தைக் குறிக்கிறது. தைமஸ் சுரப்பி என்று இதை விஞ்ஞானம் அழைக்கும்.

விசுக்தி :

இது தொண்டைக் குழியில் அமைந் துள்ளது. ஆகாயத் தத்துவத்தைக் குறிக்கும் இந்தச் சக்கரத்தின் முக்கிய ஆற்றல் பிரபஞ் சத்தில் இருந்து வரும் தீய கதிர்களை தடுத்து நிறுத்துவது ஆகும்.இதுவே தைராய்டு சுரப்பி ஆகும்.

ஆக்கினை:

இது மனிதனின் புருவ மத்தியில் அமைந்துள்ளது. ஆன்மீகத்தின் வாசல் எனப்படும்.ஞானம், பேரறிவு ஆகியவை வெளிப்படக் காரணமாக அமைவது இந்தச்



சக்கரம் தான். இதுவே பீனியல் சுரப்பி.

7.சஹஸ்ரஹாரம் (துரியம்):

இது உச்சந்தலையில் அமைந்துள்ளது. தன்னிலை கடந்து ஆன்ம விடுதலையைக் கொடுத்து பேரானந்தத்தை அள்ளித் தருவது இந்தச் சக்கரம் தான். இந்தக் சக்கரம் தூண்டப்படுவது ஆயிரம் தாமரை ஒன்றாக மலர்வதைப் போல் சொல்லப்படுகிறது. பிட்யூட்ரி சுரப்பி என்பது இதுவே.

சக்கரங்களை தூண்டுவது எப்படி?.

சாதாரண மனிதனுக்கு இந்த ஏழு சக்கரங்களும் முழுமையாகத் தூண் டப்படுவது இல்லை. பெரும்பாலான மனிதர்கள் முதல் மூன்று சக்கரங்கள் அறை குறையாய் தூண்டப்பட்டிருப்பதிலேயே வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள். வெகுசிலர் தான் நான்கு வரை வரு கிறார்கள். ஏழு சக்கரங்களும் தூண்டப்பட குருவின் துணையே முக்கியமானதாகும்.

இந்தக் குண்டலினியின் முக்கிய செயல்பாடே இந்தச் சக்கரங்களை முழு அளவில் எழுச்சியூட்டுவது தான். அணை யில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நீர், மதகுகளைத் திறந்தவுடன் முழு வீச்சில் பாய்ந்தோடுவதைப் போல குண்டலினியை எழுப்பி, சக்கரங்களைத் தூண்டும் போது மனிதனின் அளப்பறிய ஆற்றல் வெளிப்படுகிறது.

அது சரி, இந்தக் குண்டலினி சக்தியை எழுப்புவது எப்படி? அதை எழுப்ப மனிதனுக்குக் கிடைத்த அற்புதமான கருவிகள் தான் யோகாவும் தியானமும். பொதுவாகவே எல்லா யோகா மற்றும் தியானப் பயிற்சிகளும் கட்டுப்பாடற்ற ஐந்து புலன்கள், மனம் மற்றும் உணர்ச்சிகளை ஒரு நிலைக்குக் கொண்டு வர வடி வமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு கொண்டு வரும் போது புலன்கள் தாண்டிய ஓர் அனுபவத்தை உணர வாய்ப்பாக அது அமைகிறது.

செய்முறை..

* முதலில் பத்மாசன நிலையில் உட்கார வேண்டும்.

* அந்த நிலையிலேயே சுவாசத்தைக் தொடர்ந்து கவனித்து வர வேண்டும்.

* பின்னர் சுவாதிஸ்டானம், மனிப்பூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்கினை ஆகிய ஒவ்வொரு சக்கரங்களிலும் எண்ணத்தை நிறுத்தி சுவாசத்தைக் கவனிக்க வேண்டும்.

* கடைசியாக துரியத்தில் எண்ணத்தை நிலைப்பெறச் செய்ய வேண்டும்.

* உயிர் சக்தியைத் துரியம் அல்லது ஆக்கினையில் நிலைபெறச் செய்வதே குண்டலினி யோகம் எனப்படும்.

இந்த வகைப் பயிற்சிகள் என்பது வெறும் "படிப்பு" வகையைச் சேர்ந் தது மட்டுமே. அனுபவபூர்வமாக உணர வேண்டும் என்றால் குருவின் வழிகாட்டுதலே மிக முக்கியம். குருவின் அருட் பார்வை இருந்தால், குருவின் கரம் பட்டதுமே உங்களது குண்டலினி சக்தி விழிப்படைவது சாத்தியம்.

அந்தவகையில் "சாய் தியானாலயா" நிறுவனரும், நமது சாய் மகராஜ் குருவை தேடி இதழின் ஆசிரியருமான திரு.ஸ்ரீராம் குருஜி அவர்கள் தகுதி உள்ளவர்களுக்கு குண்டலினி தீட்சை வழங்கி வருகின்றார்கள். ஆன்மீகத்தில் மெய்ஞானத்தை உணர வேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்கள் குண்டலினி யோக தீட்சை பெற்று, வரும் காலத்தை உணர்ந்து வளமோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகின்றோம்.

ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) 300 நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

நானிலம் போற்றும் நாகூர் ஆண்டவர்

நாகூர் என்றதும் நம் நினைவுக்கு வருவது நாகூர் ஆண்டவர் என்றழைக்கப்படும் இறைநேசச் செல்வர் ஹஜ்ரத் செய்யிது காதிர் சாகுல் ஹமீது மீரான் சாஹிபு அவர்களின் தர்கா ஒன்றுதான்.

நாகூர் பகுதியில் அமைதி வழியில் தனது அன்பு அழைப்பால் எண்ணற்ற மக்களை இறைவனின் பக்கம் கொண்டுவந்த பெருமை நாகூர் ஆண்டவரையே சாரும்.

மாபெரும் தவசீலர், வணக்கத்துக் குறிய ஹஜ்ரத் செய்யிது நாகூர் சாகுல் ஹமீது மீரான் சாஹிபு அவர்கள் முஸ்லிம்களால் போற்றிக் கொண்டாப்படும் ஒரு உன்னத மகான் ஆவார்கள். முஸ்லிம் அல்லாதவர்கள் கூட அவர்கள் மீது மதிப்பும், மரியாதையும், கண்ணியமும் வைத்து அவர்களை போற்றுகிறார்கள். இது அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய மாபெரும் அருட்கொடை.



கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களது காலம் கி.பி 15321600 என அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஹஜ்ரத் நாகூர் சாகுல் ஹமீது நாயகம் (ரலி) அவர்கள் வட இந்தியாவில் அயோத்தியாவிற்கு அண்மையில் உள்ள மாணிக்கப்பூர் என்னும் ஊரில் பிறை 10 ஜமாத்துல் ஆகிர் மாதம் ஹிஜ்ரி 910 (கி.பி. 1491) இல் பிறந்தார்கள். அவர்களின் தந்தை பெயர் ஹஸ்ரத் சையத் ஹசன் குத்தூஸ் சாஹிப், தாயார் பெயர் பீபி பாத்திமா.



பிறப்புக்கு முன் மூன்று மாத கருவாக இருந்தபோதே தனது அற்புதத்தை நிகழ்த்திவிட்டார்கள் சாகுல் ஹமீது நாயகம். உடல்நலக் குறைவாக இருந்த தனது தந்தை நலம் பெறுவார் என்று தாயின் கருவறையில் குரல் எழுப்ப அவ்வாறே தந்தை குணமடைந்தார்.

ஆறுமாதக் கருவாக இருந்த பொழுது தனது தாயார் தொழுகைக்காக ஒழுச் செய்ய கிணற்றில் தண்ணீர் இறைக்கும் போது கிணற்றுள் விழுந்த பாத்திரத்தை தண்ணீரோடு தாயின் காலடியில் இருக்க வைத்தார். கருவறையில் இருந்தபடியே இந்த இரண்டு அதிசயங்களை நிகழ்த்தியுள்ளார்கள்

ஹஜ்ரத் நாகூர் சாகுல் ஹமீது நாயகம் (ரலி) அவர்கள் உயிரிலும் மேலான நபிகள் நாயகத்தின் 22 ஆம் பரம்பரையிலும், குத்புல் அக்தாப் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி அன்னவர்களின் 9 ஆம் பரம்பரையிலும், நபியின் மருமகன் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வழித்தோன்றலான சையித் ஹமீதுத்தீன் மகளுமான அன்னை பாத்திமாவுக்கும் மகனாக பிறந்தார்கள்.

இறைவனின் அருளால் பிறந்த அக்குழந்தைக்கு, சையது அப்துல் காதிர்' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர். சிறு வயதிலிருந்தே நாகூர் நாயகம் அவர்கள் ஆழ்ந்த அறிவுடையவர்களாகவும் மிக சிறந்த ஒழுக்க சீலராகவும் இறைதொடர்பு உடையவராகவும் இருந்தார்கள்.

சிறுவயதிலேயே நோன்பு நோற்பது, கேட்பவர் மெய் மறக்கும் நிலையில் திருமறையை அழகிய குரலில் ஒதுவது, மார்க்க கடமைகளை முறையாக கடைப்பிடிப்பது என்று பக்தியில் திளைத்து வளர்ந்தார்கள்.

எட்டு வயதிலேயே அரபி மொழி மற்றும் அதன் இலக்கணத்தை கற்றுத் தேர்ந்தார்.

குர்ஆன், தப்ஸீர், ஹதீஸ், ஃபிக்ஹு ஆகிய மார்க்கக் கல்விகளையும் சரித்திரம், பூகோளம், கணிதம், தத்துவம், தர்க்கம், வானசாஸ்திரம் ஆகிய லௌகீகக் கல்விகளையும்



பதினெட்டு வயது நிரம்புவதற்குள் கற்று முடித்தார்கள்.

வாலிப பருவம் அடைந்ததும் சாகுல் ஹமீது அவர்கள் ஹிஜ்ரி 928 ம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் ஒரு திங்கட்கிழமை வழித்துணையின்றி, கைச்செலவுக்குப் பொருள் இன்றி, துறவுக்கோலத்துடன் ஆன்மீக கல்வியை கற்பதற்காக ஒரு ஆன்மீக வழிகாட்டியை தேடி தன்னந்தனியாக பயணம் மேற்கொண்டார்கள்.

நடை பயணமாக காடுகளை கடந்து வந்து கொண்டிருந்த நாயகத்தை கொள்ளையடிக்கும் திருடர்கள் நெருங்கினார்கள். அவரிடம் பொருள் இல்லாததால் நாயகத்தை கொலை செய்யக் முயன்றனர். இறைவனின் திருஉள்ளத்தால் நாயகத்தை நெருங்கிய திருடர்களின் உடல் செயலற்றுப்போயின.

கொள்ளையர்களின் உறவினர்கள் மன்னிப்பு கோரியதைத் தொடர்ந்து நாயகம் அவர்களிடம் இரக்கம் கொண்டு பிரார்த்தனை செய்ய, கள்ளவர்களின் செயலற்ற உடல் முன்பு போல் சீரானது.

குவாலியர் நகரை நெருங்குகையில் அங்கிருந்த சிற்றூரில் ஒரு சிறிய மசூதியில் நாயகம் தங்கி தனது ஞானகுருவை இறைவனே காட்ட வேண்டும் என்று அல்லாவிடம் துஆ செய்து கொண்டார்.

அப்போது தோன்றிய அசரீரி 'ஷாஹ் அல் ஹமீது' என்ற கருணைப் பெயரை உமக்கு சூட்டியுள்ளோம். உமது ஞானகுரு ஆசிரியர் முஹம்மது கௌது. அவரிடம் செல்' என்றது.

அதன்படி ஆசிரியர் முஹம்மது கௌதுவிடம் சென்று அவரது மெய்ஞ் ஞான பயிற்சிக் கூடத்தில் பயின்று மெய்ஞ்ஞானத் தீட்சை பெற்றுக் கொண்டார். பத்து ஆண்டுகள் மெய்ஞ் ஞானக் கல்வி பயின்ற பின்னர் அங்கிருந்து புற்ப்பட்டார். அவருடன் நானூற்று நாற்பது மாணவர்கள் உடன் சென்றனர்.

மலைவழியாக வரும்போது ஆதிபிதா ஆதம் (அலைஹிஸ்ஸலாம்), ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் நாயகத்துக்கு ரிக்வத் எனப்படும் திருவோடு போன்றதொரு பாத்திரத்தை அளித்தார்கள். தேவைபடும் போது தேவைப்பட்ட உணவை இதனின்று பெற்றுக் கொள்ளலாம்.

தான் சென்ற இடமெல்லாம் மெய்ஞானத்தைப் பற்றி, மக்களுக்கு உபதேசம் செய்தும், உண்மையைப் பேணச் செய்தும் இஸ்லாத்தை நிலை நாட்டிக் கொண்டே நாயகம் அவர்கள் தான் பிறந்த ஊரான மாணிக்கப்பூர்

வந்தடைந்தார்கள்.

அங்கு கொஞ்ச காலம் இருந்தவர்கள் வீட்டில் திருமண ஏற்பாடுகள் செய்வதை தடை செய்தவர்களாக மாணவர்களுடன் லாகூர் சென்றார்கள். அதன் பின்னர் ஆப்கானிஸ்தான், பலுகிஸ்தான் மற்றும் பல்வேறு இடங்களுக்கு பிரயாணம் செய்து இறைப்பணியை செய்தார்கள்.

ஒரு முறை மக்கமா நகரத்தை நோக்கி பயணம் செய்தார்கள். வழியில் லாகூரில் உள்ள ஒரு பள்ளிவாசலில் தங்கி இருந்தார்கள். அப்போது காழி ஹஸ்ரத் நூர்தீன் சாஹிப் என்னும் சாலிஹான ஒரு முஸ்லிம் தனவந்தர் நாகூர் நாயகத்தை சந்தித்து தனக்கு பிள்ளை இல்லை என கூறி கலங்கி நின்றார். நாகூர் நாயகம் அன்னவர்கள் அல்லாஹ்விடம் குழந்தை கிடைக்க துஆ செய்தார்கள். அவரது மனைவி ஜஹாரா கருவுற்று சையத் முஹம்மத் யூஸுப் சாஹிப் என்னும் ஒரு இறைநேசரை ஈன்றெடுத்தார்கள்.

குழந்தைக்கு ஏழு வயது வரை சிறப்பான முறையில் கல்வி கற்பிக்கப்பட்டு பின்னர் மக்கா நோக்கி பயணம் செய்து நாகூர் நாயகத்திடம் கல்வி கற்க வந்தார்கள் ஹஜ் பயணத்தில் மக்கா, மதீனாவில் இறைப்பணி செய்தபடி நாகூர் நாயகம் வாழ்ந்த காலத்தில் பல அற்புதங்களை வெளிபடுத்தினார்கள்.

நாகூர் நாயகம் அவர்களுக்கு அன்பளிப்பாக இபுனு ரவூஃப் என்ற செல்வந்தர் தனது கப்பலை நாயகத்துக்கு சொந்தமாக்கி பத்திரம் எழுதி கொடுக்க, அதை தன்னிடம் வந்து யாசித்தவனுக்கு கொடுத்துவிட்டு கஃபாவை நோக்கி நடந்தே பயணமானார்கள்.

நாயகம் அவர்கள் தங்களின் 37ம் வயதில் ஜித்தா துறைமுகத்திலிருந்து கப்பல் ஏறி கேரளாவின் பொன்னாணி எனும் ஊரில் கரையிறங்கினார்கள். அப்போது நாயகத்துடன் அவரது வளர்ப்பு மகனும், மாணவருமான யூசுஃப் ஆண்டகையும் இருந்தார்கள். பின்னர் அங்கிருந்து லட்சத்தீவுகள், சிலோன் முதலிய வெளிநாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டார்கள்

இலங்கை, காயல்பட்டினம், கீழக்கரை, தென்காசி என பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்து இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொண்ட நாகூர் நாயகம் அவர்கள் இறுதியாக தஞ்சாவூர் வந்தார்கள்.

அப்போது தஞ்சையை ஆண்ட மன்னர் அச்சுதப்ப நாயக்கர் தீர்க்க முடியாத, நீண்டகால நோயோடு வாழ்ந்து வந்தார். மன்னரின் அமைச்சர்கள் நாகூர் நாயகத்தை அணுகி மாளிகைக்கு வந்து மன்னருக்கு உதவுமாறு வேண்டி நின்றனர். நாகூர் நாயகம் அவர்கள் அங்கே சென்று மன்னருக்கு சூனியம் செய்யும் பொருட்டு, ஒரு புறாவின் உடலிலே பல்வேறு முட்களை கொண்டு குத்தப்பட்டு நோயினை உருவாக்கும் விதத்தில் சூனியம் செய்யப்பட்டு உள்ளதை அறிந்து கொண்டார்கள்.

தன் மாணவரை அனுப்பி, அந்த புறாவை கொண்டு வரச்செய்து, ஓதி ஒவ்வொரு முள்ளாக அந்த புறா உடம்பில் இருந்து கழற்றி எடுத்தார்கள். அனைத்தும் நீங்கியவுடன் மன்னர் பரிபூரண சுகமடைந்தார்.

நடந்த அற்புதத்தை கண்ணெதிரே



பார்த்து கொண்டிருந்த மகாராணி, நாகூர் நாயகத்திடம் தனக்கும் மன்னருக்கும் இடையே குழந்தை பாக்கியம் இல்லா குறையை சொல்லி தமக்கு உதவுமாறு பிரார்த்தித்தாள்.

நாகூர் நாயகம் அவர்கள் அவ்வாறே பிரார்த்தனை செய்ய அவர்களுக்கு நல்ல ஒரு சந்ததி உண்டாயிற்று. நாகூர் நாயகம் அவர்களின் இப்பெரிய உதவிகளுக்கு கைமாறாக மன்னர் பல சொத்துக்களை கொடுக்க முன் வந்தார். ஆனால் நாகூர் நாயகம் அவர்கள் அவற்றை வாங்கவில்லை. மாறாக, கடலோரத்தில் தனக்கு ஒரு துண்டு நிலம் தருமாறு கேட்டுக்கொண்டார்கள்.

அதன்படி, மன்னர் கடலோரத்தில் சுமார் 30 ஏக்கர் நிலத்தை "சுவர்க்க பூமி" என கூறி நாகூர் நாயகம் அவர்களிடம் கொடுத்தார். அந்த இடத்தில்தான் தற் போதைய நாகூர் தர்கா மற்றும் கட்டி டங்கள் அமையப் பெற்றுள்ளன.

துறவு நிலையில் நாகூர் நாயகம் அவர்கள் நாகூருக்கு சுமார் 2 மைல் தூரத்தில் உள்ள வஞ்சூர் என்னும் ஊருக்கு சென்று மரப்பலகையினால் மூடப்பட்ட ஒரு குழிக்குள் இருந்து 40 நாட்கள் நோன்பு நோற்றார்கள்.

அந்த இடத்திலேயே தற்போதைய வஞ்சூர் பள்ளி வாசல் அமையப் பெற்றுள்ளது. மேலும் நாகூர் கடலோரத்திற்கு அருகில் அமைந்துள்ள சில்லடி பள்ளி வாசலிலும் 40 நாட்கள் நோன்பு நோற்றார்கள்.

இருபத்தியெட்டு வருடம் நாகூரில் வாழ்ந்த மகான் நாகூர் நாயகம் அவர்கள் ஹிஜ்ரி 978 (1600)ஆம் ஆண்டு தமது 68 ஆம் வயதில் ஒரு வெள்ளிக்கிழமை இப்பூவுலகை விட்டும் மறைந்தார்கள். அவர்களின் அறிவுரையின்படியே அவர்களது புனித மண்ணறை (சமாதி) அமைக்கப்பெற்றது. அவர்களின் புனித மண்ணறைக்கு வலது பக்கத்தில் அவர்களின் (வளர்ப்பு) மகனார் யூஸுப் மற்றும் மருமகளின் புனித மண்ணறைகள் அமையப்பெற்றுள்ளன.

நாகூர் பகுதியைச் சேர்ந்த மீனவர் கள் நாகூர் நாயகத்தின் சமாதியைச் சுற்றி பலகையால் பள்ளி போல் அடைத்தார்கள். அந்தப்பள்ளியே இன்று அழகிய ஐந்து கோபுரங்களை உடையதாய் விளங்குகிறது.

மராட்டிய மன்னர் பிரதாப்சிங் (1739-1763) நாகூர் தர்கா கட்டிடங்களை விரிவு படுத்திக்

கட்டினார். இம்மன்னரே நாகூர் தர்கா கட்டிடங்களின் தர்மகர்த்தா என்று சொல்லப்படுகிறது.

மேலும் பிரதாப்சிங் தர்காவின் பராமரிப்பிற்கு பதினைந்து கிராமங் களை மானியமாக அளித்ததாக கல்வெட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது. தர்காவில் உள்ள மிக உயரமான (131) அடி மனோராவைக் கட்டியதும் இம்மன்னரே ஆவார். பிரதாப்சிங்கிற்குப் பிறகு வந்த மராட்டிய மன்னர்களும் தர்காவிற்கு பல கொடைகள் வழங்கியுள்ளனர்.

முதல் மினாராவை இப்ராஹீம் கான் என்பவர் ஹிஜ்ரி ஆயிரத்து ஐம்பத்தைந்தாம் வருடம் கட்டினார். இதற்கு சாகிபு மினாராவென்று பெயர்.

இரண்டாம் மினாராவை செய்யது மரைக்காயர் கட்டிக் கொடுத்தார். இம்மினாரா நாயகத்தின் தலைப் பக்கம் இருப்பதால் தலைமாட்டு மினாரா எனப்படுகிறது. இந்த மினாராவில் இந்து மத அன்பர் ஒருவர் தங்கக் கலசத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.

மூன்றாம் மினாரா (முதுபக்கு மினாரா) மலாக்காவை சேர்ந்த பீர் நெய்னா என்பவரால் கட்டபட்டது. நான்காம் மினாரா (ஓட்டு மினாரா) பரங்கிப்பேட்டை நீதிபதி தாவுத்கான் என்பவரால் கட்டபட்டது

ஐந்தாம் மினாரா(பெரிய மினாரா) தஞ்சையை ஆண்டுவந்த பிரதாப்சிங் மன்னர் கட்டிக் கொடுத்தார். பெரிய மினாரா 131 அடி உயரம் கொண்டதாகும்.

நாகூர் நாயகத்தின் உடலை குளிப்பாட்டிய தண்ணீர் தேங்கி நின்ற சிறிய குட்டை தான் தர்கா குளம். குட்டை போல் இருந்ததை அச்சை சுல்தான் பெருங்குளமாக வெட்டி தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்தார்.

இந்த ஸ்தலத்தில் தான் நாகூர் நாயகம் மரணித்தார்கள்.

நாகூர் தர்காவில் ஏழு வாயில்கள் உள்ளது. இவை அனைத்தும் வெள்ளித் தகட்டால் வேயப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாசலிலும் நூற்றுக் கணக்கான குத்துவிளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. இந்த வாயில் வழியாக எந்த மதத்தினரும் செல்லலாம்.



கடைசி மூன்று வாசல்களை மட்டும் பெண்கள் செல்ல அனுமதியில்லை. நாகூர் நாயகம், அவரது மகன் முகம்மது யூசுஃப், மருமகள் செய்யிதா சுல்தான் பீவி அம்மாள் ஆகியோரின் சமாதிகள் உள்ளே அமைந்துள்ளது.

நாகூர் ஆண்டவர் இடுப்பில் கட்டியிருந்த இரும்புச்சங்கிலி, குமிழ்கள் இல்லாத காலணி, அதிசயம் நிகழ்த்திய கொம்புத் தேங்காய ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. நாகூர் தர்கா நிர்வாகம் நாகூர் தர்காவை நாயகத்தின் வாரிசுகளான சுமார் 640 குடும்பத்தினரே நிர்வகித்து வருகின்றனர்.

நினைவு தினம் (உருஸ்)

நாகூர் நாயகம் அவர்கள் ஒரு வியாழக்கிழமை தினமன்றே நாகூரிற்கு வருகை தந்தார்கள். எனவே, ஒவ்வொரு வியாழன் அன்றும் பெருந்திரளான மக்கள் தர்காகவிற்கு வந்து நாயகத்தைவணங்கிச் செல்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் நாகூர் நாயகத்தின் கந்தூரி விழா இஸ்லாமிய மாதமான ஜமாத்துல் ஆகிர் மாதம் முதல் நாள் தொடங்கி 14 நாட்கள் நடைப்பெறுகின்றன. இந்த கந்தூரி விழாவிற்கு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பாகிஸ்தான், அரேபியா, பர்மா, மற்றும் இந்தியாவின் ஏனைய மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்தர்பிரதேஷ், மேற்கு வங்காளம் என உலகெங்கும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் வந்து கலந்து கொண்டு செல்கின்றனர்.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

மந்திரம்

மந்திரம் சக்தி மிக்கது. இக்கால விஞ் ஞானம் அதை நிரூபித்துள்ளது. ஒலி அதிர்வலைகளால் ஒன்றை ஆக்கலாம், அழிக்கலாம், நோயை நீக்கலாம், உண்டாக்கலாம், ஒரு வரை சிரிக்க வைக்கலாம், அழ வைக் கலாம், குழந்தையை சமா தானப் படுத்தலாம். நாகப் பாம்பை ஆட வைக்கலாம். இசையால் பசுவிடம் இருந்து அதிகப் பாலை சுரக்க வைக்கலாம். இசையால் தாவரங்கள் வளரும். இது உண்மை. இது நிரூபிக்கப்பட்டுள்ளது.



மந்திரமும் இசையே! மந்திரம் உங்கள் உடல், உள்ளம் சார்ந்த சிக்கல்களை எளிதில் தீர்க்கும். ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! என்று செபிப்பதாலும் அந்த நன்மையைப் பெறலாம். சாந்தி என்றால் அமைதி. அது நமது மனதிற்குள் அமைதி அலையை செலுத்தும்.

அது மிகுந்த சக்தி உடையது. உங்களுடைய உடலை அந்த வீரியத்தால், நலத்தால், இன்பத்தால் நிரப்புங்கள். அவைகள் உங்கள் உடலில் நிரம்பி வழிவதாகுக! உங்களுடைய ஆனந்தமே மற்றவர்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும். நீங்கள் அந்த அலையை உங்களுக்குள் செலுத்துவீராக! அதுவே உலக நலத்தின் ஆரம்பமாகும். இதுவே மந்திரத்தின் மகத்தான சக்தியாகும்.

புனித யாத்திரை!

ஆண்டவன் தன்னை நீங்கள் பிரார்த்திக்க வேண்டும் என்று விரும்பினால் உங்களுக்கு ஏதாவதொரு துன்பத்தை கொடுப்பான். வழியில் உங்கள் வாகனம் நின்று போகலாம். அல்லது அதைவிட மோசமான நிகழ்ச்சி நடந்து விடலாம்.

அதனால்தான் துன்பங்கள் "ஆண்டவனின் வரபிரசாதம்" என்று கூறுகின்றோம். துன்பம் நேரும்போது ஆண்டவனை அதிகமாக நினைக்கின்றோம். ஆனால் ஆழமாக அல்ல, மேம்போக்காக. நமக்கு வந்த சிக்கலை உணர்ந்து, இது நம்மால் தீர்க்க முடியாது என்பதை உணரும் பொழுதுதான் நாம் இதயப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றோம்.

என்னால் இனி முடியாது. சிக்கலை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். உன்னை நம்புகின்றேன். ஈதான் அதை தீர்க்க வேண்டும் என்று உள்ளம் உருக வேண்டுகின்றோம். வாழ்க்கை என்பது ஆண்டவனை நோக்கிச் செல்லும் ஒரு பயணம். அது புனித யாத்திரை. ஆண்டவனை முற்றிலும் நம்பி வெறுங்கையுடன் செல்வதே உண்மையான புனித யாத்திரையாகும்.

அந்தியூர் ஸ்ரீ ஆனந்த சீரடி சாய்பாபா ஆலயம்



வணக்கம் சாய்ராம் நான் அந்தியூர் விஸ்வநாதன். குருஜி ஸ்ரீராம் சாய்ராம்

எனக்காக ஒவ்வொரு வியாழக் கிழமை அன்று பாபாவுக்கு ஆலயம் அமைக்கவும், மற்றும் எனது கடன்கள் தீரவும் என கூட்டுப் பிரார்த்தனை செய்வது தாங்கள் அறிந்ததே.

அவரின் கூட்டுப்பிரார்த்தனை நிறைவேறியது. ஆம் எங்கள் அந்தியூர் மக்களுக்கு பாபா ஆலயம் அமைத்து தந்துள்ளார். கடந்த 19/01/22.அன்று புதிதாக பாபா ஆலயம் கட்டப்பட்டு சிலைபிரதிஷ்டை செய்யப்பட்டது. மிக்க நன்றி சாய்ராம். நம் சாய் தியானா அன்பர்களுக்கும் சிரம் தாழ்ந்த நன்றி. குருஜி ஸ்ரீராம் சாய்ராம் கூட்டுப்பிரார்த்தனையில் எனது கடனையும் பாபா அடைத்து தருவார் என நம்புகிறேன்.

மேலும் கடந்த 5 மாதத்திற்கு முன்பு திரு. ஸ்ரீராம் குருஜியுடன் பேசும்போது நாங்கள் எப்போது பாபா ஆலயம் கட்டுவோம் என கேட்டபோது அவர் சிறிதும் யோசிக்காமல் வரும் தைமாதம் என கூறினார். அவர் கூறிய அவ்வாறே நடந்தது. பாபா நம் ஸ்ரீராம் சாய்ராம் வடிவில் எனக்கு வாக்களித்தார். அதன்படியே எங்கள் ஊரில் பாபா ஆலயம் அமைந்தது.

எல்லாம் பாபா ஆசீர்வாதம்.

குருஜி ஸ்ரீராம் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தார், பாபா பக்தர்கள் சார்பாகவும் மிக்க நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாயராம்.

பகவான் சீரடி சாயி பாபாவிற்கு பக்தர்கள் பலர் பல விதங்களில் சேவை புரிகின்றனர். சிலர் அன்ன தானம் செய்கின்றனர். சிலர் நாம செபம் செய்கின்றனர். சிலர் பாபாவின் புகழைப் பரப்ப புத்தகம் எழுதுகின்றார்கள். சிலர் உபன்யாசம் செய்கின்றனர். ஆனால் எங்கோ ஒரு

சிலர்தான் ஆலயம் கட்டுகின்றாரகள்.

ஆலயம் கட்டும்பணி என்பது மகத்தானது. அதிலும் பூர்வபுண்ணியம் இருந்தால் மட்டுமே முடியும் என்பார்கள். அதையும் தாண்டி ஆலயம் அமைக்க இடம், பொருள், ஏவல், மூன்றும் வேண்டும். இவ்வளவும் இருந்து ஆலயம் கட்டி முடித்து விட்டால் நான் தான் கட்டினேன் என்ற ஆணவம் இல்லாதிருக்க வேண்டும். எல்லாம் இருந்தும் பகவான் சாய்பாபா நினைத்தருள வேண்டும்.

சாயியின் கருணை இல்லாது ஒருவர் அவருக்கு ஆலயம் எழுப்புவதென்பது கனவிலும் நடவாதது. நாம் எவ்வளவோ ஆலயங்களைப் பார்க்கின்றோம். ஆரம்பித்து பல வருடங்களாய் முடிக்க முடியாமலும் வழிபாட்டிற்கு கொண்டு வர முடியாமலும் பல ஆலயங்கள் கிடப்பில் போடப்படுகின்றன.

அவை எல்லாம் பாபாவின் ஆணையில்லாது மனிதனின் ஆசைக்காக உருவாகும் ஆலயங்கள் ஆகும். ஒரு சில ஆலயங்களே எப்போது ஆரம்பித்தார்கள் எப்படி முடித்தார்கள் என்றே தெரியாமல் பொதுமக்களின் வழிபாட்டிற்கு வந்து விடும். அவ்வகையான ஆலயங்களே பாபாவின் ஆசியால் உருவாகும் ஆலயங்கள்.

அந்தவகையில் ஈரோடு மாவட்டம் அந்தியூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆனந்த சீரடி சாய்பாபா திருக்கோவில். பாபாவே தனக்காக அமைத்துக் கொண்ட ஆலயம் என்பது கண்கூடு. அதற்கு அதே ஊரைச் சேர்ந்த எம்.விஸ்வநாதன் என்ற தனது பக்தரை பகவான் சாயிநாதர் தன் ஆலயத்தை கட்ட தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்பதும் உண்மை.

பல கோடீஸ்வரர்கள் பாபாவிற்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும், கைகளில் ஒரு ரூபாய்கூட இல்லாத ஒரு ஏழை பக்தனை தனக்கு ஆலயம் கட்ட அனுமதிக்க நமது கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் நமது சாயிநாதரைத் தவிர வேறு யாரால் முடியும்.

பலவருடங்களாக தன் இஷ்ட தெய்வமான சீரடி சாய்பாபாவிற்கு ஒரு ஆலயம் அமைத்திட வேண்டும் என்ற கனவை தன் நெஞ்சில் சுமந்து கொண்டு வாழ்ந்த ஒரு சாதாரண தபால் ஊழியரான ஈரோடு மாவட்டம் அந்தியூரைச் சேர்ந்த சகோதரர்



சாய் எம். விஸ்வநாதன் அவர்களின் கனவை நிறைவேற்ற சாயி நாதனே தன் ஆலயத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றார்.

கடந்த 15.10.21 விஜயதசமி அன்று பாபாவின் சமாதி தினத்தை ஒரு ஆலயம் அமைத்து வெகு விமரிசையாக கொண்டாட முடியவில்லையே என்ற ஏக்கம் ஒரு புறம் இருந்தாலும், ஆலயத்தில் நடப்பது போன்றே அனைத்து நிகழ்ச்சிகளையும் தன் தெய்வமான பகவான் சாயிநாதரின் சமாதி தினத்தை கொண்டாடுவது என முடிவு செய்து,

காலை 9 மணிக்கு காலை ஆரத்தி10.30 பாபாவிற்கு 108 போற்றி, பகல் 12.30 மணிக்கு மதிய ஆரத்தி.மதியம் 2.30மணிக்கு ஸ்ரீ சீரடி சாய்பாபா மஹா சமாதி அடைந்த நேரத்தில் சிறப்பு சாம்பிராணி புகையூட்டல். 3.00 மணிக்கு சாய் சத்சரிதம் முப்பத்தி ஏழாவது அத்தி யாயம் பாராயணம் செய்தல். மாலை 5 மணிக்கு சாய்பாபாவிற்கு சிறப்பு அபிஷேகம் மாலை 6.00மணிக்கு சாய்பாபாவுக்கு சிறப்பு அலங்காரம். இரவு 7 மணிக்கு மாலை ஆரத்தி இரவு 8.00மணிக்கு அன்னதானம். இரவு 9.00 மணிக்கு இரவு ஆரத்தி வரை ஒரு ஆலயத்தில் என்னென்ன விசேசம் நடக்குமோ அதை எல்லாம் தனது வீட்டிலேயே பக்தர்களைக் கூட்டி வெகு விமரிசையாக நிகழ்த்தினர் விசுவநாதன் பானுமதி தம்பதியர்.

அன்றே சாயிபாபாவிற்கு ஆலயம் கட்ட வேண்டும் என்றும் மனமுருகவும் பிரார்த்திக் கொண்டனர். தன் பக்தனை பாபா ஒரு போதும் கைவிட்டதில்லை என்பதற்கு ஒரு சான்று இந்நிகழ்வு.

சென்ற ஜூலை மாதம் நமது ஆசிரியரும் குருஜியுமான திரு.ஸ்ரீராம் அவர்களிடம் தனது ஆலயம் கட்டும் கனவை விவரித்து பிரார்த்திக்குமாறு கேட்க, அவரும் வரும் தை மாதத்





திற்குள் நீங்கள் பாபாவின் ஆலயத்தை கட்டிவிடுவீர்கள். என்று கூறி "சாய் தியானா" கூட்டு பிரார்த்த னையில் பதிவு செய்து வாழ்த்துகின்றார்.

திரு. விசுவநாதன் அவர்களுக்கோ தை மாதத்திற்கு இன்னும் ஐந்து மாதம் தானே இருக்கின்றது. நம்மிடம் இடமும் இல்லை பொருளும் இல்லை. கடன் மட்டுமே இருக்கின்றது. இது எவ்வாறு சாத்தியம் ஆகும் என்று யோசிக்க, பாபா தனது லீலையால் 15.12.22க்குள் இடத்தை தேர்ந்தெடுத்து 16.12.22 ல் ஆலயத்திற்கு அஸ்திவாரம் போட்டு, கடந்த 19.1.22 ல் தனது விக்கிரக பிரதிஷ்டையையும் நடத்திக் கொண்டார்.

இக்காரியங்களுக்கு பகவான சாயி நாதருக்கு உற்ற உறு துணையாக வும், நல்ல ஊழியராகவும் இருந்த ஆலய அறங்காவலர் திரு.எம் விசுவநாதன் சாய்ராம் அவர்களுக்கும், அவர்களது துணைவியார் திருமதி.பானுமதி சாய்ராம் அவர்களுக்கும், அவர்களது இரு குழந்தைகளுக்கும், பகவான் சாயிநாதர் நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ், மெய்ஞானம் தந்து பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரின் அருளால் வாழ்த்துகிறோம்.

ஆலயத்தில் இப்போது நான்கு கால ஆரத்தியும், அபிசேக, ஆராதனைகளும் வெகு ஜோராக நடைபெற்று வருகின்றன.பக்தர்கள் ஸ்ரீ ஆனந்த சீரடி சாய்பாபாவை தரிசித்து அருளை பெற்றுச் செல்கின்றனர்.

மேன்மேலும் ஆலயத் திருப்பணிகள் அனைத்தும் தாமதமின்றி நிறைவேறி விரைவில் ஆலய குடமுழுக்கு பெருவிழா மிகச்சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல பகவான் சாயிநாதரை வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

இவ்வாலயத்தின் திருப்பணிகளுக்கு உதவ நினைக்கும் பாபாவின் சேவகர்கள் ஆலய நிர்வாகியை தொடர்பு கொள்ளலாம்.

திரு.எம். விசுவநாதன்,அவர்கள்
ஸ்ரீ ஆனந்த சீரடி சாய்பாபா ஆலயம்,
அந்தியூர், (போஸ்ட்),
ஈரோடு (மா) 638501.
தொலைபேசி எண்: 9524689599

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

தெய்வீக மூலிகை வேப்பிலை!

வேப்பிலை எனும் அமிர்தத்தை முறைப்படி உட்கொண்டு வந்தால் பல தீராத நோய்களைத் தீர்த்து வைக்கும் என்றும் சித்தர்களில் முதன்மை சித்தரான அகஸ்தியர் பெருமான் அருளிச் சென்றிருக்கிறார்.

சாகா வரத்தை தருகின்ற அமிர்தமே வேப்பிலை எனும் திருநாமத்தை பெற்று ஒரு அரிய வகை மூலிகையாக பூமியில் அவதரித்து இருப்பதாக இதன் சிறப்பை கூறுகிறார் அகஸ்தியர்.

குறைந்தது நூறு ஆண்டை கடந்த முற்றிய வேப்பமரத்தின் முதிர்ந்த இலை, இளம் கொழுந்து, இலை, வேப்பம் பூ, வேப்பம் பிஞ்சு, வேப்பங்காய், வேப்பம் விதை, வேப்ப மரப்பட்டை இவைகளை தனித்தனியாக எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து பொடி செய்து அனைத்தையும் சம எடையாக கலந்துகொண்டு, இதன் எடைக்கு ஏழில் ஒரு பங்கு வேப்பம் பழத்தின் பழ ரசத்தைப் சாறாக பிழிந்து இந்த பொடியோடு கலந்து நிழலில் உலர்த்தி மீண்டும் இடித்து சலித்து இதை பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு உப்பு புளி காரத்தை தவிர்த்து பத்தியம் காத்து வேப்ப மரத்தின் அட்டங்க பொடியை சாப்பிட்டு வர அனைத்து விதமான உடல் நோய்களும் தீரும்.



வேம்பு கற்பத்தை முறையாக ஒரு மண்டலம் உட்கொண்டு வந்தால் வண்டுகடி, வாதவலி, கணுச்சூலை, எனும் மூட்டுவலி, சன்னி சொறி, சிரங்கு, குஷ்டம், கைகால் முடக்கு, சீத சன்னி, தனுர்வாதம், பச்சை வாதம் ,பாரிசவாதம், சூலை விப்புருதி, கட்டி, வீக்கம், இவைகளோடு தீராத மேகம், வெள்ளை நோய், உடல் அரிப்பு, தடிப்பு, ஊரல், இவைகள் தீரும் மேலும் கடுமையான இருமல் விலகும். நமது உடலானது இறுகி கற்தூனை போல வலிமை பெறும் நாடி நரம்புகள் முறுக்கேறி சரீரத்தில் உள்ள நோய்கள் அனைத்தும் நீங்கும் முகத்திற்கு அழகு உண்டாகும்.

ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கைப்பிடி வேப்பிலையை போட்டு நன்கு கொதிக்க வைத்து ஆறிய பின் முகம் கழுவி வர முகத்தில் தோன்றிய பருக்கள், மற்றும் கரும்புள்ளிகள் காணாமல் போய்விடும். முகம் கண்ணாடி போல் மின்னும். பார்ப்பதற்கு முகம் முன்பு இருந்ததை விட இப்பொழுது அழகாக தோன்றும்.

வேப்பம் கொழுந்தை மைபோல் அரைத்து ஒரு நெல்லிக்காய் அளவு எடுத்து அதிகாலையில் வெறும் வயிற்றில் மூன்று நாட்கள் உட்கொண்டு வர வயிற்றில் உள்ள புழுக்கள் இறந்து வெளியேறிவிடும் இதனால் வாய்வு தொல்லை நீங்கும். வயிற்று உப்பிசம் குறையும்.



வேப்பம் கொழுந்து மஞ்சள் கிழங்கை இரண்டையும் சம அளவாக எடுத்து அரைத்து புண்கள் மீது தடவி வர சீக்கிரம் புண்கள் ஆறி விடும் சேற்றுப் புண்கள் மீது பூச சேற்றுப்புண்கள் ஆறிவிடும்.

வேப்பிலை நெல்லிக்காய் இரண்டையும் மை போல அரைத்து அக்கி புண் மற்றும் அரிப்பு காயங்கள் உள்ள இடங்களில் தடவ இவை அனைத்தும் குணமாகும்.

வேப்பிலையோடு சமமாக தோல் நீக்கிய சுக்கை சேர்த்து இதன் எடைக்கு நான்கில் ஒரு பங்கு இந்துப்பை கலந்து இதை அடுப்பிலிட்டு லேசாக சூடாக்கி வெதுவெதுப்பாக இருக்கின்ற பொழுது கண்களில் வைத்து கட்டி வர கண் வலி கண் அரிப்பு நீங்கும்.

ஒரு கைப்பிடி அளவு முதிர்ந்த வேப்பிலையை எடுத்து மண்பானையிலிட்டு நன்கு கருகும்படி வறுத்து தூள் செய்து இதில் மூன்று கிராம் எடுத்து சுட்டு பொடித்த வசம்பு தூளை இதன் எடைக்கு பாதி சேர்த்து இதை மோரில் கலக்கி குடித்துவர அஜீரணக் கோளாறால் ஏற்பட்ட அடிக்கடி பேதியாவது நிற்கும்.

வேப்பிலை மற்றும் மஞ்சள் இரண்டையும் சமமாக எடுத்து நன்கு அரைத்து அம்மைப் புண் மீது பூசி வர புண்கள் ஆறிவிடும்

வேப்பிலையும் மஞ்சளையும் அரைத்து ஒரு ஒரு நெல்லிக்காய் அளவு எடுத்து அரை லிட்டர் தண்ணீரில் கலந்து இதை அடுப்பில் வைத்து பாதியாகச் சுண்டக் காய்ச்சி காலை மாலை இருவேளையும் அருந்தி வர அம்மை நோய் தீரும்.

கால் லிட்டர் தண்ணீரை முதல் நாள் இரவு நன்கு கொதிக்கவைத்து அதில் பதினைந்து வேப்பம் பூக்களை போட்டு மூடி வைத்திருந்து காலையில் இந்த நீரை வடிகட்டி குடித்துவர உடலுக்கு நோய் எதிர்ப்புசக்தியும் ஆரோக்கியமும் அதிக பலமும் உண்டாகும்.

வேப்பமரத்து உள் பட்டையை காயவைத்து இடித்து இதன் எடைக்கு சமமாக கடுக்காய்த் தூளை சேர்த்து இதில் மூன்று கிராம் எடுத்து வெந்நீரில் கலந்து தினம் இருவேளை முப்பது நாட்கள் சாப்பிட்டு வர தோல் நோய்கள் அனைத்தும் நீங்கும் கொடிய குஷ்ட நோயும் இதனால் குணமாகும்

வேப்ப மரத்தின் வேரை இடித்து ஒரு கைப்பிடி எடுத்துக்கொண்டு ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து இதை பாதியாக சுண்ட காய்ச்சி இந்த நீரால் வாய் கொப்பளித்து வர பல்வலி குணமாகும் வாய் துர்நாற்றம் அகலும்.

வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் இரண்டையும் சம அளவாக கலந்து வைத்துக் கொண்டு மாதம் இருமுறை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை காலைவேளையில் இந்த எண்ணெயில் ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து சாப்பிட்டு வர மலக்குடலில் உள்ள பூச்சிகள் இருந்து மலத்துடன் வெளியேறும் வயிறு சார்ந்த நோய்கள் அனைத்தும் தீரும் குறிப்பாக வாய்வுத் தொல்லை வயிற்று உப்பிசம், அஜீரணக் கோளாறுகள் அனைத்தும் விலகும.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது, ஓம் ஸ்ரீ சற்குரு சிவசாமி சித்தர் சீவபீட சமாதி தரிசனம்.

ஓம் ஸ்ரீ சற்குரு சிவசாமி சித்தர்

காஞ்சி மாநகரம் ஏராளமான மகான்களை மனித சமுதாயத்திற்கு வழங்கியிருக்கின்றது. அந்த வகையில் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தின் முன்மண்டபத்தில், உயரமான உருவமும், கறுத்த நிறமும், வழுக்கைத் தலையும், அழுக்கு உடையும் அணிந்து பார்ப்பவர்களுக்கு பித்தனாய், சித்தனாய், மகானாய் வாழ்ந்து வந்தார் நம் சிவசாமி சித்தர்.

பக்தர்கள் அவரை அணுக நினைத்தால், உடனே அவர்களை, போடா, போடா, என்று விரட்டி விடுவார். அதனாலேயே மக்கள் அவரை " போடா சுவாமிகள்" என்று அழைத்தனர். கடைசியில் அதுவே அவரது பெயராக நிலைத்தது.

சுவாமிகளைப் பற்றிய வாழ்க்கை வரலாறு எதையும் அறியமுடியவில்லை என்றாலும் செவிவழிச்செய்திகளை சேகரித்து வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

சுவாமிகளைப்பற்றி, பலர் பலவிதமாக கூறினாலும், அவர் செய்த அற்புதங்கள் அனைத்தும் உண்மை. இன்றும் அவரது சமாதியில் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

ஆரம்பத்தில் சுவாமிகளின் பெயரை ராமசாமி, சிவசாமி என்றும், ராஜன்சாமி என்றும் அழைத்தவர்கள் இறுதியில் சிவசாமி என்றே அழைக்கத் தொடங்கினர். அவரது சீவசமாதியிலும் சிவசாமி என்றே பொறிக்கப் பட்டிருக்கின்றது.

சுவாமிகள் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவிலில் அந்தநாளில் யானை கட்டும்

இடத்தில்தான் தங்கியிருந்தார்.

காஞ்சிபுரம் சங்கரமடத்தின் 68 வது பீடாதிபதியான ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், போடா சுவாமிகளை மகா யோகி என்று கூறி சிறப்பித்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சித்தத் தன்மையை உணர்ந்த ஆங்கிலேயர் ஒருவர் இவரிடம் சீடராகி சுவாமிகளுக்கு தேவையானதை செய்து தொண்டாற்றி வந்தார். சுவாமிகளுக்கு தினந்தோறும் உணவு வழங்குவதை செய்து வந்தார். ஒரு கட்டத்தில் அவரிடம் இருந்த பொருள் தீர்ந்து விடவே, சுவாமிகளுக்கு உணவு வாங்க முடியாமல் மிகவும் மனம் வருந்தினார்.

இதை குறிப்பால் உணர்ந்த நம் சுவாமிகள், ஆங்கிலேயர் வைத்திருந்த இரண்டு பெட்டிகளை எடுத்துவரச் செய்து, அந்த இரண்டு பெட்டிகளையும் திறந்து எச்சிலை துப்பி மூடிக் கொடுத்து, உன் சொந்த நாட்டிற்குப் போடா என்று அனுப்பி வைத்தாராம்.

சுவாமிகள் கூறியும், சுவாமிகளை விட்டு பிரிய மனமில்லாமல் அங்கிருந்து புறப்பட்ட ஆங்கிலேய சீடர் கொஞ்ச தூரம் சென்றதும் சுவாமிகள் எச்சில் துப்பிய பெட்டிகளை திறந்து பார்க்க, அதற்குள் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. சீடர் தன் குருவின் மகிமையை எண்ணி மகிழ்ந்து தன் தாய் நாட்டிற்கு திரும்பிச்சென்றார்.



சுவாமிகள் யாரிடமும் உணவு கேட்கமாட்டார். யாராவது கொடுத்தால் தேவை என்றால் உண்பார். இல்லை என்றால் அருகில் உள்ளவர்களிடம் கொடுத்து விடுவார். சிலர் இட்லி வாங்கிவந்து சுவாமிகளின் வாயில் ஊட்டிவிடுவர். சில நேரங்களில் உண்பார். சில நேரங்களில் ஊட்டி விடுபவரின் முகத்திலேயே உமிழ்ந்து விடுவார். அவ்வாறு உமிழ்ந்தால் தங்களது கர்ம வினைகள் குறைவதாக மக்கள் நினைத்தனர். அதற்காகவே பலபேர் காத்துக் கிடந்தனர்.

1970, 80-களில் பள்ளி மாணவர்கள் அதிகளவில்



சுவாமிகளிடம் வருவார்கள். சுவாமிகளும் மாணவர்களிடம் கோபப்படமாட்டார். அக்காலத்தில் மாணவர்கள் மை ஊற்றி எழுதும் பேனாக்களையே பயன்படுத்தினர். தேர்வு சமயத்தில் மாணவர்கள் பேனா நிப்புகளை வாங்கிவந்து சுவாமிகளிடம் கொடுத்து அவரிடம் ஆசிபெற்றுச் சென்று தேர்வு எழுதுவார்கள்.

அப்படி தேர்வு எழுதி வாழ்க்கையில் உயர்ந்த மாணவர்கள், இன்று வளர்ந்து ஆளாகி அவரது சீவசமாதிக்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமிகள் வாழும் காலத்தில் அவரை பார்த்துவிட்டுச் சென்றாலே நல்லது நடக்கும் என்று மக்கள் எண்ணி தினந்தோறும் சுவாமிகளை வந்து தரிசித்துச் செல்வர்.

காஞ்சிப்பெரியவர் சுட்டிக்காட்டிய ஒரு சில மகான்களில் நம் போடா சுவாமி என்கின்ற ஸ்ரீ சிவசாமி சித்தரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விதியினால் கொடிய நோய்க்கு ஆளானவர்களை தன்னுடைய தெய்வீக அருளால் குணப்படுத்தி இருக்கிறார் இவர். காலையில் ஏகாம்பரநாதர் கோவிலில் இருந்து ரிக்ஷாவில் ஏறி கோரிக்கை என்னும் இடத்திற்கு போய், அங்கிருந்து பதினாறுகால் மண்டபத்தில் போய் அங்கு சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டு, மறுபடியும் கோவிலுக்கு வருவது என்று இருந்த இவரிடம் ஏராளமான பக்தர்கள் தங்கள் பிரச்சனைகளை கூறி தங்கள் மனக்குறை நீங்கி சென்றிருக்கின்றனர்.

1989 இல் சமாதி அடைந்த இந்த சிவசித்தரின் ஆசிரமத்திற்குச் சென்று நம் கோரிக்கைகளை முன் வைத்து வணங்கினால் பல அதிசயங்களை நிகழ்த்துவார் சிவசாமி சித்தர்

சுவாமிகள் வாழும் காலத்தில் பயன்படுத்திய சைக்கிள் ரிக்சாவை இன்றும் சுவாமிகளின் சீவசமாதியில் பத்திரப்படுத்தி காட்சிப் படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

காஞ்சி நகர் செல்லும் வாய்ப்பு உள்ளவர்கள் சுவாமியின் சீவபீடம் சென்று வணங்கி, மகிழ்ந்து,



சுவாமிகளின் ஆசி பெற்று மகிழுங்கள்.

சீவபீட முகவரி:

ஓம் ஸ்ரீ சற்குரு சிவசாமி சமாதி ஆசிரமம், கெங்கையம்மன் கோவில் தெரு,பெரிய காஞ்சிபுரம்,

மயான பூமி அருகில், (ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலயம் அருகே)

பேரூந்து மார்க்கம்:

சென்னை காஞ்சிபுரம் பேரூந்து நிலையம்.(இங்கிருந்து சீவசமாதிக்கு சேர் ஆட்டோ மூலம் செல்லலாம்)

புகைவண்டி மார்க்கம்:

சென்னை காஞ்சிபுரம் புகை வண்டி நிலையம்.(வாடகை கார்கள், ஆட்டோ மூலம் செல்லலாம்.)

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

- (தொடரும்)



அன்பு

அன்பு என்றால் எல்லாவற்றிலும் கடவுளை காண்பதாகும். அதுவே எல்லையற்ற, நிபந்தனையற்ற அன்பாக இருக்கும். உங்களுக்கு இப்படிப்பட்ட அன்பிருந்தால் இந்த உலகத்தில் பிடிக்காதது என்பதே இருக்காது.

நீங்கள் எல்லாவற்றையும், உங்களைக் கடிக்கும் கொசுவைக்கூட நேசிப்பீர்கள் அவைகளை வெறுக்க மாட்டீர்கள். கொசுவே நீங்கள் கடிப்பதற்காக படைக்கப்பட்டிருக்கின்றீர்கள். என்னைக் கடிப்பதன் மூலம் உங்கள் வேலையைச் செய்கின்றீர்கள். அதனால் கொசுவிடம், என்னிடம் வராதீர்கள் நான் என் வேலையைச் செய்கின்றேன் என்று கூறுவீர்கள்.

நீங்கள் கொசுவை நேசிப்பதை நிறுத்த மாட்டீர்கள். ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். கொசுவை நேசிப்பது என்பது அது உங்களை கடிப்பதை அனுமதிக்க அன்று. நாம் கொசுவை நேசிப்பதால் நாம் அதை விரட்டக் கூடாது என்று பலர் நினைக்கின்றனர். அது சரியல்ல. நீங்கள் விசத்தை நேசிக்கலாம். அதற்காக அதை குடிக்க வேண்டும் என்பதில்லை.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன். அண்ணாநகர்.ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.

திருமதி. சுமதி ராமமூர்த்தி கொளத்தூர். ரூ.1000.

திருமதி.சாந்தி.மந்தைவெளி.ரூ.1000.

திருமதி. இந்திரா வெங்கடாசலம். மந்தைவெளி.ரூ.1000

திருமதி. வாழ்க வளமுடன் சுமதி. பெரியார் நகர்.ரூ.1000.

திரு.எஸ்.சிவராமன்.பெரம்பூர்.ரூ.800.

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800.

திரு.சாந்தமூர்த்தி குடும்பத்தார் போரூர்.ரூ.700.

திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.

திருமதி. ஹேமரம்யா சிவக்குமார். அவிநாசி. ரூ.500.

திரு.வெங்கடாசலம். டி.நகர். ரூ.500.

திருமதி. நித்ரா லட்சுமி. கோவை.ரூ.500

திரு.மதன்சிங். பெரவள்ளூர்.ரூ.500

திரு. அர்ஜுன். அயனாவரம்.ரூ.500.

திரு.ஆர்.ஜெயா தன்ஷா கொளத்தூர்.ரூ.500.

திரு. ஹரி பிரசாத். AYK. ரூ.500.

திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி.யாமினிபிரியா குடும்பத்தார். அயனாவரம்.ரூ.300.

திருமதி.லலிதா.துரைப்பாக்கம்.ரூ.280

திரு.விஜயன்.சி.சி.பேங்க் மேனேஜர்.பெரியார் நகர்.ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் - டிராவல்ஸ். பெரியார் நகர்.ரூ.200.

திரு. உமா சக்திவேல்.AYK. ரூ.200.

திரு.பாலசுப்பிரமணியன். திட்டை.ரூ.200.

திருமதி.பிரியா குடும்பத்தார். அயனாவரம். ரூ.100.

திருமதி. சுஜாத்தா அயனாவரம்.ரூ.100

திருமதி.சாந்தி மோகன்.AYK ரூ.100.

திருமதி.அபிராமிஅசோக் AYK. ரூ.100.

திருமதி.உமா முருகன்.சின்னாளப்பட்டி. ரூ.100.

சிவா அரிசி மளிகை ரூ.50.

பெரியார் நகர் பாபா பக்தர்கள் ரூ.50

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர்.அரிசி.1



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. நாகராஜா சுவாமிகள். சதுரகிரி.ரூ.500.
திரு.சிவராமன். பெரம்பூர். ரூ.500.
திரு. தேவராஜன்.சுவாமிமலை.ரூ.500.
திரு.பாலசுந்தரம். டி.நகர். ரூ. 501
திருமதி.சூர்யா. புழல். ரூ.400.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.